மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# இந்து தத்துவம்

1. பிரஸ்தான திரயங்கள் எவை ?

   பிரம்மசூத்திரம், உபநிடதம், பகவத்கீதை

2. பிரஸ்தான திரயங்களுக்கு உரை எழுதியோர் யார்?

   சங்கரர், இராமானுஜர், மத்துவர்

3. இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, யமன் முதலிய பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அவ்வாறு அழைக்கப்படும் “சக்தி ஒன்றே” என்பதைக் கூறும் இருக்குவேதப் பாடல் எது?

   ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி

4. மகத் தேவானாம் அசுரத்துவம் ஏகம் என்ற வேத பாடலின் கருத்து?

   தேவர்கள் பலவாயினும் அவற்றின் இறைமைத்துவம் ஒன்றே

5. கடவுள் கோட்பாட்டினையும் பிரபஞ்ச கோட்பாட்டினையும் கூறுவது எது?

   வர்ணசூக்தம்

6. இயற்கை உலகு என்பன எவ்வாறு படைக்கப்பட்டது என்பதைக் கூறும் பாடல் எதில் இடம்பெறுகின்றது?

   இருக்குவேத பத்தாம் மண்டலத்தின் 129 ஆம் பாடல் நாசதீய சூக்தம்

7. பிரம்ம சூத்திரத்தை இயற்றியவர் யார்?

   பாதராயணார்

8. பிரம்ம சூத்திரத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை?

   வேதாந்த சூத்திரம், உத்தர மீமாம்சை, சாரிரக சூத்திரம்

9. பிரம்ம சூத்திரத்தின் நான்கு அத்தியாயங்கள் எவை?

   சமன்வயம் , பலம், அவிரோதம், சாதனம்

10. நவீன இந்து தத்துவவியலாளர் ஒருவரை தருக

    டாக்டர் திரு ராதாகிருஷ்ணர்

11. பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதியோர் யாவர்?

    மூவகை வேதாந்திகள், பாஸ்கரர், பர்வதி வல்லவர்,
    சுகர் நிம்பாக்கர், ஸ்ரீ கண்டர்

12. உபநிடதங்களுக்கு ஒப்பாக தோன்றிய இலக்கிய வடிவம் எது?

    பகவத் கீதை

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

13. அருச்சுனன் விஷாத யோகத்துடன் தொடங்கும் மூவகை யோகங்கள் எவை?
பக்தி யோகம், ஞான யோகம், கர்ம யோகம்

14. வேதாந்திகள் கீதைக்கு எழுதிய உரை யாது?
கீதா பாஷ்யம்

15. எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது என்று கூறும் நூல் எது?
பகவத் கீதை

## உபநிடதம்

உபநிடம் என்பது உபூநிசத் எனப் பிரிக்கப்பட்டு குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற உண்மைகளைச் சிரத்தையுடன் கற்றல் எனப் பொருள்படும். அல்லது பிரம்ம ஞானத்தை உணர்த்தும் ஆசிரியரின் அடியில் நெருங்கி இருந்து மறைப்பொருளை சிரத்தையுடன் கேட்டல் எனப் பொருள்படும்.

1. உபநிடதங்களின் எண்ணிக்கை,
108
2. உபநிடதங்களைத் தொகுத்து பிரமசூத்திரம் என்ற பெயரில் ஆக்கியவர் -
பாதராயணார்

3. வேதங்களின் ஞானகாண்டம் என போற்றப்படுபவை -
உபநிடதங்கள்

4. சத்தியமே வெற்றி பெறும் எனும் வாசகம் இடம்பெறும் உபநிடதம் -
முண்டக உபநிடதம்

5. குருகுலக் கல்வியின் முடிவில் குருவினால் சீடனுக்கு கூறப்பட்ட ஒழுக்கவியல் சார்ந்த
அறிவுரைகள் அடங்கிய உபநிடதம் -
தைத்திரீய உபநிடதம்

6. நீரில் கலந்த உப்பானது கண்ணுக்கு தெரியாது இருப்பது போல் பிரம்ம் கண்ணுக்கு தெரியாது
எங்கும் நிறைந்துள்ளது என்ற வர்ணனை இடம் பெறும் உபநிடதம் -
சாந்தோக்கிய உபநிடதம்

7. யமனுக்கும் நசிகேதனுக்கும் இடையே இடம் பெற்ற ஆன்ம விசாரணை பற்றிய உரையாடலை கொண்டுள்ள உபநிடதம் -
கடோபநிடதம்

8. சைவசமய சார்புடைய உபநிடதம் -
சுவேதாஸ்வர உபநிடதம்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

9. சிறிய ஆலம் விதையிலிருந்து பெரிய ஆலமரம் தோன்றுவது போல உலகம் நுண்ணிய பிரமத்திலிருந்து உலகம் படைக்கப்பட்டது என்ற கருத்து இடம் பெற்ற உபநிடதம் -

சாந்தோக்கிய உபநிடதம்

10. சிலந்தியில் இருந்து நூல் தோன்றுவது போல பிரமம் தன்னிலிருந்து உலகத்தை தோற்றுவித்தது எனக் கூறிய உபநிடதம் -

முண்டக உபநிடதம்

11. எள்ளில் எண்ணெய் உள்ளடங்கி இருப்பது போல தயிரில் நெய்போல விறகில் தீ போல பிரமதத்துவம் மறைந்துள்ளது என்ற கூற்று இடம்பெறுவது -

சுவேதாஸ்வர உபநிடதம்

12. என்னை பொய்மையில் இருந்து மெய்மைக்கு இட்டு செல்வாயாக என்ற தத்துவ சிந்தனை இடம் பெறும் உபநிடதம் -

பிருகதாரண்ய உபநிடம்

13. உபநிடதங்களில் பிரமத்துக்கு இருநிலைகள் கூறப்படுகின்றன அவை -

நிஷபிரபஞ்ச நிலை – பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்ட நிலை

சப்பிரபஞ்ச நிலை – பிரபஞ்சத்துடன் கூடிய நிலை

14. உபநிடத மகாவாக்கியம் -

தத்துவமஸி – நீ அதுவாகின்றாய்

சோ(அ)கம் அஸ்மி – நானே அவன்

அயம் ஆத்மா பிரமம் -

இந்த ஆத்மா பிரமம்

அகம் பிரமாஸ்மி - நான் பிரமம்

பிரக்தானம் பிரமம் - அறிவே பிரமம்

15. உபநிடத மகா வாக்கியங்கள் தத்துவ சிந்தனைகளுக்கு முன்னோடியாக அமையும் விதம் - பிரமம் ஆன்மா பிரபஞ்சம் பற்றிய உண்மைகளை அறிய உதவுகின்றன. மூவகை வேதாந்திகள் தமது வேதாந்தக் கோட்பாட்டை நிறுவ மகாவாக்கியங்களை பயன்படுத்தியுள்ளனர். தத்துவமஸி என்பதன் விளக்கமாக பகவத்கீதை அமைந்துள்ளனர்.

16. உபநிடதங்கள் வேதசிரசு என அழைக்கப்படுவதற்கான காரணம் -

வேதங்களில் அடங்கியுள்ள சிந்தனை மரபுகளை முழுவடிவில் தெளிவுபடுத்துவதால் வேதசிரசு எனப்படுகின்றது.

பிற்கால தத்துவ சிந்தனைகள் தோன்றுவதற்கு மூலமாக காணப்படுவதால் வேதசிரசு எனப்படுகின்றது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

17. உபநிடதங்கள் கூறும் ஆன்மா,

ஆன்மா உயிர் ஜீவன் பசு போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. ஆன்மாக்கள் எண்ணிக்கையில் பல. ஆன்மா வேறு உடல் வேறு (வெவ்வேறுபட்ட உடல்களில் ஒரே தன்மையிலான ஆன்மாக்கள் உண்டு). ஆன்மா ஐந்து கவசங்களால் மூடப்பட்டுள்ளது.

1. அன்னமய கோசம்.
2. பிராணமய கோசம்.
3. மனோமய கோசம்.
4. விஞ்ஞானமய கோசம்.
5. ஆனந்தமய கோசம்.

- ஆன்மா அழிவற்றது அழியக்கூடிய சரீரம் அழிவற்ற ஆன்மாவுக்கு இருப்பிடமாக உள்ளது. ஆன்மா பிரமம் பற்றி அறிவது பரவித்யா எனவும் உலகம் பற்றி அறிவது அபரவித்யா எனவும் கூறப்படும். ஆன்மாக்கள் தாம் செய்த வினைகளுக்கு ஏற்ப பிறவிகளை எடுக்கின்றன.(உபநிடத சம்பாசனைகளை உதாரணமாக கையாள வேண்டும்.)

- உபநிடதங்கள் பிரமத்தை அடையும் வழிகளை கூறுகின்றன. பிரமத்தை பிரம உபாசனையின் மூலமான ஞானத்தால் அறிந்து கொள்ள முடியும். சிரவனம், மனனம், நிருத்தியாசனம் ஆகிய ஞானவழிகள் மூலம் ஒருவன் பூரண விடுதலை பெறுவான். பற்றுதல், அகங்காரம் நீக்குதல், வைராக்கியம் என்பன முத்திக்கு அவசியமாகும்.

**உபநிடதம் கூறும் பிரமம்**

- இப்பிரபஞ்ஞுத்தின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் நிலைபேற்றுக்கும் காரணமான மூலப்பொருள் எதுவோ அதுவே பிரமம்
- இவ்வுலகின் அடிப்படை பிரமமே எதனால் இவ்வுலகம் தோன்றி எதனால் இயங்கி எதில் ஒடுங்குகிறதோ அதுவே பிரமம்.
- வார்த்தைகளால் வருணிக்க முடியாத பொருள் சூரியன், ஆகாயம், மின்னல், இடைவெளி யாவும் பிரமம்.
- இறைவனே பிரமம்.
- பிரமத்துக்கு இருநிலைகள் கூறப்படுகின்றது.

பிரபஞ்சத்தோடு கூடிய நிலை - சப்பிரபஞ்ச நிலை

பிரபஞ்சத்தை கடந்த நிலை - நிஷபிரபஞ்ச நிலை

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

சப்பிரபஞ்க நிலையிலுள்ள பிரமம் தஜ்ஜலன் எனப்படுகின்றது.

(ஒவ்வொரு உபநிடதமும் பிரமம் பற்றி கூறியுள்ள கூற்றுகள் உதாரணங்கள் விடய ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ளன அவற்றை பயன்படுத்தி தொகுத்து கொள்ளவும்.)

## இந்து தத்துவ வளர்ச்சியில் உபநிடதங்களின் பங்களிப்பு

- உபநிடதங்கள் இந்துசமய தத்துவங்களான வேதாந்தம் பகவத்கீதை ஐவகை தரிசனம் சைவசித்தாந்தம் என்பவற்றின் தோற்றத்துக்கு அடிப்படையாக விளக்கியுள்ளன.
- பிரமம் ஆன்மா பிரபஞ்சம் கன்மம் மறுபிறப்பு ஆகிய அனைத்து தத்துவ விடயங்களுக்கும் உபநிடதத்தில் ஆராயப்பட்டுள்ளமை பிற்கால தத்துவ வளர்ச்சிக்கு மிகுந்த பங்களிப்பாகும்.
- சங்கரர் ''ஏகம் ஷத்'' என்ற மகாவாக்கியத்தை கொண்டே பிரமம் மட்டுமே உள்பொருள் என்ற அத்வைத வேதாந்தத்தை முன்வைத்தார் தனது அத்வைத வேதாந்தத்தை தசோபநிடதங்களின் அடிப்படையாக கொண்டே கட்டி எழுப்பினார்.
- இராமானுஜர் தனது உலகம் பற்றிய பரிணாமவாதத்தை உபநிடதம் கூறும் பிரமம், பிரபஞ்சம் பற்றிய சிந்தனைகளின் மூலமே கட்டி எழுப்பினார்.
- மூவகை வேதாந்தத்துக்கும் அடிப்படை உபநிடதம்.
- சைவ சித்தாந்தமும் பதி ஆன்மா பற்றிய விளக்கம் கன்ம கோட்பாட்டு முத்திக்குரிய வழிகள் என்பவற்றை உபநிடத சிந்தனைகளின் அடிப்படையிலேயே முன்வைத்துள்ளது.

## இந்து தத்துவ வளர்ச்சியில் பகவத்கீதை

இந்து மதத்தின் பிரஸ்தான திரயங்களில் ஒன்று பகவத்கீதை. இது மகாபாரதத்தின் பீஷ்மபருவத்தில் அர்ச்சுன விஷாத யோகத்துடன் ஆரம்பித்து பதினெட்டு அத்தியாயங்களில் 700 சுலோகங்களில் அமைந்துள்ளது. பதினெட்டு அத்தியாயங்களும் பதினெட்டு அத்தியாயங்களின் பெயரில் அமைந்துள்ளன. இவை கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்பவற்றின் வாயிலாக தத்துவ சிந்தனைகளை தெளிவாக விளக்குவதால் உபநிடதம் பசு எனவும் பகவத்கீதை பால் எனவும் கூறப்படுகின்றது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

**பகவத்கீதை கூறும் தத்துவ சிந்தனைகள்**

1. பகவத்கீதை பரம்பொருள், ஆன்மா, உலகம், கன்மம், மறுபிறப்பு, அறம் துன்பங்களிலிருந்தும் பற்றுகளிலிருந்தும் விடுபட்டு ஆன்ம விடுதலை பெறல் பற்றிய சிந்தனைகளைக் கூறுகிறது.
2. உபநிடதம் கூறும் பிரமம் பற்றிய கொள்கைகளைப் போலவே கீதையும் விஷ்ணுவுக்கு நிர்க்குணநிலை சகுணநிலை என இருநிலைகளைக் கூறுகிறது.
3. கிருஷ்ணர் அனைத்தையும் கடத்த நிர்க்குணமாகவும் அனைத்திலும் கலந்த சகுணமாகவும் கூறப்படுகிறது.
4. பிரபஞ்சத்தின் தோற்றம் ஒழுக்கத்துக்கு விஷ்ணு மூலாதாரம் எனக் கூறப்படுகிறது. நான் பிரபஞ்ச படைப்பின் முதற்காரணம் என கிருஷ்ணர் ஞான விக்ஞான யோகத்தில் கூறுகிறார்.
5. விஷ்ணுவுக்கு பிரபஞ்சம் முழுதும் நிறைந்த அந்தர்யாமி எனும் வியாபகத் தன்மை கூறப்படுகிறது.
6. வைணவத்தில் சிறப்பு பெறும் அவதாரக் கோட்பாடு கீதையில் கூறப்படுகிறது. “நல்லாரைக் காக்கவும் தீயோரை அழித்து தர்மத்தை நிலைபெறச் செய்யவும் யுகங்கள் தோறும் நான் அவதரிக்கின்றேன் என கிருஷ்ணர் கூறுகின்றார்.
7. ஆன்மாக்களின் நித்திய தன்மை, அவற்றின் இயல்புகள் கன்மவினைகள், ஆன்மாக்களின் விடுதலை என்பவற்றையும் கீதை கூறுகிறது. ஆத்மா அழியாத உண்மைப் பொருள் என்று கூறுகிறது.
8. ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் விஷ்ணுவின் பாதாரவிந்தங்களை அடைதலே எனக் கூறுகிறது.
9. மூவகை வேதாந்திகளும் பகவத்கீதைக்கு கீதா பாஷியம் என்ற பெயரில் உரை எழுதியுள்ளார். அவ்வகையில் வேதாந்தக் கோட்பாட்டுக்கு கீதை உரைப்பிரமாணமாக உள்ளது.
10. வேதாந்தத்தில் முதன்மை பெறுவது ஞான கீதையில் பக்தியும் அதற்கு மேலான பிரபக்தியும் சிறப்பிக்கப்படுகிறது. இது பூரண சரணாகதி தத்துவமாகும். இதனையே விசிட்டாத்வைத வேதாந்தமும் முன்வைக்கிறது.
11. கன்மம், பக்தி, ஞானம் மூன்றையும் சிறப்பிக்கும் சைவ சித்தாநதத்திற்கும் கீதையே ஆதாரமாகிறது.
12. பரம்பொருளை தத்துவ ஆராய்ச்சிக்கு மட்டுமுரிய பொருளாக அன்றி வழிபாட்டுக்குரிய பொருளாக்கி அதன் மூலம் தத்துவத்தையும் சமயத்தையும் இணைத்த பெருமைக்குரியதாக கீதை சிறப்பிக்கப்படுகிறது.

# வேதாந்தம்

- **உபநிடத மெய்யியல் சிந்தனைகளின் உச்சநிலையை வேதாந்தக் கோட்பாடு பிரதிபலிக்கிறது.**

  வேதாந்த கோட்பாட்டின் உருவாக்கத்திற்கு அடிப்படையான நூல்கள் வேதம், பிரம்ம சூத்திரம், உபநிடதம்

- **சங்கரரின் அத்வைதம்**

1. அத்வைதம் என்பதன் பொருள்

   உண்மை பொருள் இரண்டு அல்ல ஒன்று (பிரம்மம் மட்டுமே உண்மையான பொருள்)

2. அத்வைத கோட்பாட்டின் திறவுகோலாக அமையும் நூல்

   மாண்டுக்ய காரிகை

3. சங்கரர் ஏற்கும் பிரமாணங்கள்

   பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம், அனுபலப்தி, அலுத்தாபத்தி

4. பின்வருவனவற்றின் பொருள்

   பிரம்மம் சத்தியம் - பிரம்மமே உண்மை பொருள்

   ஜகத் மித்யா - உலகம் ஒரு தோற்றம்

   ஜீவோ பிரம்ம ஏவனா அபர - ஒவ்வொரு ஆன்மாவும் பிரம்மமே

5. சங்கரர் கூறும் பிரம்மத்தின் இரு நிலைகள்

   நிர்க்குண பிரம்மம்- மாயையுடன் சேர்ந்த நிலை

   சகுன பிரம்மம் - மாயையுடன் சேராத நிலை

6. சங்கரர் கூறும் ஆன்மாவின் இரு நிலைகள்

   பரமாத்மா என்றும் உள்ளது இ ஜீவாத்மா அவித்தைக்கு உட்பட்டது.

7. சங்கரர் மாயை உள்ள பொருளும் அல்ல இல்லாத பொருளும் அல்ல என்றும் கூறும் இயல்பு

   அநிர்வசனீயம்

8. சங்கரர் கூறும் மாயையின் இரு இயல்புகள்

   ஆவரணம் - உள்ளதை மறைக்கும் இயல்பு.

   விக்ஷேபம்- இல்லாததை தோற்றுவிக்கும் இயல்பு

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

9. சங்கரர் முத்திக்கு கூறும் வழி
ஞானம் (தன்னை பிரம்மம் என உணர்தல்)

10. சங்கரர் கூறும் முத்தி
அத்வைத முத்தி

## இராமானுஜரின் விசிட்டாத்வைதம்

- விசிட்டாத்வைதம் என்பதன் பொருள்.
- இராமானுஜரால் முன்வைக்கப்பட்ட விசிட் ூ அத்வைதம் - விசிட்டாத்வைத வேதாந்த கோட்பாடு ஆகும்.
- விசிட் + அத்வைதம் எனப் பிரித்து முத்தி நிலையில் ஆன்மாவும் பிரமமும் விசேடமான தன்மையில் இரண்டல்ல என்பதாகும்.
- இறைவன் வி^சியம் ஆன்மாஇ உலகம் வி^சனம்.
- இவ்வாறு விசேடனத்திற்கும் விசேடியத்திற்கு இடையிலான தொடர்பை விளக்கும் கோட்பாடு விசிட்டாத்வைத கோட்பாடு ஆகும்.
- இராமானுஜர் சங்கரரின் அத்வைத கொள்கையிலிருந்து வேறுபட்ட பரிமாணத்தில் விசிட்டாத்வைத கோட்பாட்டை முன்வைத்தார்.
- விசேடமான விளக்கத்தை உடைய அத்வைதம் ஸ்ரீமத் நாராயணனையே பிரமமாக கொள்கின்றது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# விசிட்டாத்வைத கோட்பாட்டின் சிறப்பம்சம்

- இரமானுஜர் அசித் சித் ஈஸ்வரன் என்ற மூன்று பொருள் உண்மையைக் குறிப்பிடும் தத்துவதிரயம் பேசுகின்றார்.
- இவர் பேசும் அத்வைதத்தில் உலகு உயிரை விட பிரமத்திற்கு விசேடனம் கொடுக்கப்பட்டுள்ளது. நிர்க்குணப்பிரமம் சகுணப்பிரம நிலையை ஏற்றமை சிறப்பாகும்.
- மூவகைபிரமாணங்களான காட்சி, கருதல் உரையுடன் ஆப்த வாக்கிய பிரமாணமாக நாலாயிர திவ்யபிரபந்தத்தை சிறப்பாக ஏற்றுள்ளது.
- உயிர் இறைவனுடைய உடல் என்பதை விளக்குகிறார். (சம்பந்தவாதக் கொள்கை).
- இறைவனே உயிர்கள் அனைத்திற்கும் உலகுக்கும் அந்தர்யாமியாய் அதாவது அதன் உள் நின்று அவை அனைத்தையும் இயக்குகின்றார்.
- இறைவன் உயிர்க்கு உயிராய் நிற்கும் காரணத்தால் இறைவன் வேறு உயிர் வேறு அல்ல இரண்டும் ஒன்றுதான் என்பது பெறப்படுகின்றது. இதுவே இராமானுஜர் பேசும் அத்வைதமாகும்.
- இவரது அத்வைதத்தில் உலகமும் உண்டு உயிர்களும் உண்டு ஆனால் அவை பிரமத்திற்கு விசேடனங்கள் அவ்விசேடனங்களையுடைய பிரமம் விசேடியம் இந்த இரண்டும் சேர்ந்த விசிட்டமே இராமானுஜர் கூறும் விசிட்டாத்வைதம்.
- இறைவனுக்கும் ஆன்மா, உலகுக்கும் இடையிலான பிரிக்க முடியாத தொடர்பை அப்பிரத சித்திக் கொள்கை மூலம் விளக்குகிறார்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## சங்கரரின் அத்வைத கோட்பாட்டுடன் இராமானுஜரின் விசிட்டாத்வைதக் கோட்பாடு வேறுபடும் விதம்

| சங்கரர் | இராமானுஜர் |
|---|---|
| • சங்கரர் உள்பொருள் ஒன்று என்கிறார். | • இராமானுஜர் முப்பொருள் உண்மையை கூறுகின்றார் உள்பொருள் மூன்று |
| • ஆறு பிரமாணம் | • மூன்று பிரமாணம் |
| • பிரமமே உண்மைப் பொருள் ஆன்மாவும் உலகமும் தோற்றப்பொருள் பிரமம் சிவன் | • அசித் சித் ஈஸ்வரன் என்ற முப்பொருள் உண்மையை கூறி அதில் ஈஸ்வரன் மேலான பொருள் ஏனைய இரண்டும் இறைவனுக்கு அங்கங்கள் என்கிறார் |
| • பிரமம் உலகமாக தெரிகிறது | • பிரமத்திலிருந்து உலகம் பரிணாமமடைகிறது |
| • பிரமம் அவித்தையின் காரணமாக ஆன்மாவாக தோன்றுகிறது எனவும் மாயையின் காரணமாக பிரமம் உலகமாக தோன்றுகிறது என்கிறார்<br>அதுவே விவர்த்தவாதம் | • பரிணாமவாதம் அப்பிரத சித்தி என்பவற்றின் மூலம் ஆன்மா உலகம் உள் பொருள் என்கிறார். |
| • காரணப் பிரமம் உண்மை காரிய பிரமம் பொய | • உலகு உயிர் இறைவனிடம் கொண்ட தொடர்பு பிரிக்க முடியாது அப்பிரதக்சித்திக் கொள்கை மூலம் விளக்குகிறார். |
| • ஆன்ம விடுதலைக்கு ஞானத்தை குறிப்பிடுகின்றார் முத்திக்கு ஞானம் முக்கியத்துவம் | • ஆன்ம விடுதலைக்கு பிற பக்தி ஞானத்தை குறிப்பிடுகின்றார்.முத்திக்கு பக்தி முக்கியம். |
| • பரமான்மா ஒன்றே ஜீவான்மா இல்லை ஏகான்மவாதம் | • பரமான்மா ஒன்று ஜீவான்மா பல |

**மத்துவரின் துவைத வேதாந்தம் :**

- துவைதம் என்னும் சொல்லுக்கு இரண்டு என்பது பொருள். இரண்டு எனப்பேசப்படுபவை இறைவனும் ஆன்மாவும் ஆகும்.
- இவை இரண்டும் இரண்டு என்ற நிலையினின்றும் நீங்கி ஒன்று என்ற நிலையை ஒருபோதும் அடைவதில்லை. எப்பொழுதும் இரண்டும் இரண்டுதான் - துவைதக் கோட்பாடு.
- மத்துவர் பன்மைவாதி, உள்பொருள்கள் பல, ஈஸ்வரன் அல்லது இறைவன், சீவன், சடம் ஆகியன உண்மைப் பொருள்கள்.
- இவை நிரந்தரமானவை. என்றும் இருப்பவை. இவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளும் - பேதங்களும் நிரந்தரமானவை. ஐவகைப் பேதங்களை இவர் குறிப்பிடுகிறார்.

| | | |
|---|---|---|
| சீவஈஸ்வர பேதம் | - | சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையில் உள்ள பேதம். |
| சடஈஸ்வரபேதம் | - | சீவனுக்கும் ஈஸ்வரனுக்குமுள்ள பேதம். |
| சீவசடபேதம் | - | சீவனுக்கும் சடத்துக்குமுள்ள பேதம். |
| சீவபரஸ்பரபேதம் | - | ஒரு சீவனுக்கும் இன்னொரு சீவனுக்கும் இடையிலான பேதம். |
| சடபரஸ்பர பேதம் | - | ஒரு சடத்துக்கும் இன்னொரு சடத்துக்கும் இடையிலான பேதம். |

- புற உலகின் உண்மையை மத்துவர் ஏற்றுக் கொள்வதால் அவரது கொள்கையை காட்சிப் பொருள் கொள்கை என்பர்.
- இறைவன் ஒருவனே சுதந்திரமான உள்பொருள், மற்றைய உள்பொருள்களாகிய ஆன்மாக்களும் சடப்பொருள்களும் (சுதந்திரமற்றவை).

**(அ) பிரமம்**

- சகுணப் பிரமத்தை மத்துவர் முதன்மைபடுத்துகிறார்.
- பிரமம் முக்குணங்களையும் கடந்ததே தவிர, தெய்வீக இயலான பண்புகளையும் குணத்தையும் கடந்ததல்ல. (குண பூரணன்)
- பிரமம் எல்லாப் பொருட்களினதும் உள்ளீடாக அமைவதுடன் அவைகளின் செயற்பாட்டிற்கு வழிகாட்டியாகவும் அமைகிறது.
- இறைவன் மட்டுமே சார்பற்றவன். மிக உயர்ந்த உள்பொருள் (சர்வ உத்தமன்).
- மகாவிஷ்ணு மூர்த்தியே சர்வவல்லமையை படைத்த ஈஸ்வரன். அவர் ஆன்மாக்கள்

  பிறவித் துன்பத்தின்றும் நீங்கி முத்தி பெறுதற்பொருட்டு, உலகைப் படைத்தல்,

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் இயற்றுகிறார்.

- ஆன்மாக்களின் அறியாமைக்குக் காரணமாயமைவது இறைவனின் பேராற்றல் தன்மையெனக் கருதப்படும் மாயையாகும்.
- ஆன்மாக்களின் அறிவுக்கும் விடுதலைக்கும் காரணமாக அமைவது பிரமம்.

## மூவகை வேதாந்திகளின் வரலாற்று நோக்கு

### சங்கரர் - அறிமுகம்

சங்கரர் - கி .பி 8ஆம் நூற்றாண்டு (கி பி 288 தொடக்கம் 829 வரை)
பிறந்த இடம் - காலடி
தாய் தந்தை - ஆர்யாம்பாள் ஆதிகேசவர்
குரு - கோவிந்தர் கௌடபாதர்

- **நூற் பணி**

  பிரம்ம சூத்திரம் பகவத் கீதை உபநிடத உரை சிவானந்த லகரி சௌந்தர்ய லகரி பஜகோவிந்தம்
  சுப்பிரமணிய புஜங்கம் போன்ற நூல்களை எழுதினார்

- **பிற பணி**

  இந்தியாவில் நான்கு திசைகளிலும் மடங்களை ஸ்தாபித்தார்.

- **இவர் புரிந்த அற்புதங்கள்**

  தங்க நெல்லிக்கனி மழை பொழிய செய்தமை
  பூர்ணா நதியை திசைமாறி ஓடச் செய்தமை
  தானே தீயை உண்டாக்கி தாயின் தகனக்கிரியை செய்தமை
  தாய்க்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கச் செய்தமை

### இராமனுஜர் - அறிமுகம்

இராமானுஜர் கிபி 11-ஆம் நூற்றாண்டு
பிறந்த இடம் - ஸ்ரீபெரம்பத்தூர்
தாய் தந்தை - காந்தியம்மை ஆதிகேசவ ஆச்சார்யார்
ஆசிரியர் யாதவ பிரகா'ர் திருக்கோட்டியூர் நம்பி

- **நூற் பணி**

  பிரஸ்தான திரயங்களுக்கு உரை
  வேதாந்த சாரம் ,வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம் ,சத்திய திரயம் என்பவற்றை எழுதினார்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

- **பிற பணிகள்**

  கீதையை உபதேசித்தமை நாலாயிர திவ்ய பிரபந்தத்தை பரப்பியமை
  வைணவ மதத்தை நிலைபெறச் செய்தமை

- **இவர் புரிந்த அற்புதங்கள்**

  ஸ்ரீரங்கத்து மடாதிபதி ஆளவந்தாரின் வேண்டுகோளை அறிந்து பாடியமை
  காஷமீரிலிருந்து போதாயன விருத்தி நூல் கிடைக்கப் பெற்றமை
  கிருஷண பகவானை வேட்டுவ வடிவில் வழித்துணையாக பெற்றமை

**மத்துவர் - அறிமுகம்**

கி.பி 13ஆம் நூற்றாண்டு
பிறந்த இடம் - உடுப்பி
தாய் தந்தை - வேதவதி அம்மை மத்தியகேசபட்டர்
ஆசிரியர் - பிரேசர்

- **நூற் பணி**

  பிரஸ்தான திரயங்களுக்கு உரை,
  பாரத தாற்பரிய நிர்ணயம் , சர்வம் மூலம் ,பாகவத புராணத்திற்கு விளக்க உரை என்பனவற்றை எழுதியுள்ளார்.

- **பிற பணிகள்**

  உடுப்பியில் கிருஷணருக்கு ஆலயம் நிறுவியமை கன்னடத்தில் ஹரிதாஸர்களை உருவாக்கியமை.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# சைவசித்தாந்த சாத்திரங்கள்

- ❖ சைவசித்தாந்த தத்துவத்தை முற்றுமுழுதாக விளக்குவன சைவசித்தாந்த சாத்திர நூல்கள் எனப்படும்.
- ❖ தமிழ் மொழியிலே சைவசித்தாந்தம் கோட்பாட்டை சுருக்கியும் விரித்தும் கூறும் நூல்கள் பதினான்கு எனவும், அவற்றில் முதல் நூலாய் அமைந்தது சிஞானபோதம் எனவும் கூறுவர்
- ❖ மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் அவற்றை இயற்றியோரும் வருமாறு:

1. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்ததேவர்
2. திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்யவந்ததேவர்
3. சிஞானபோதம்
4. சிவஞானசித்தியார் - மெய்கண்டதேவர்
5. இருபா இருப:்து - அருணந்திசிவாசாரியார்
6. உண்மை விளக்கம் - மனவாசகங்கடந்ததேவர்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்யன்
9. வினா வெண்பா
10. போற்றிப்ப:்றொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மைநெறி விளக்கம்
14. சங்கற்பநிராகணம்

(7–14 : உமாபதிசிவாச்சாரியார்)

(7-14 வரையான எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனச் சிறப்பிக்கப்படும்.

## சிவஞானபோதம்

- பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுள் நடுநாயமாக விளங்குவது சிவஞானபோதம் ஆகும்
- இதுவே சைவசித்தாந்தத்தின் முதனூலாகும்.
- சிவஞானபோதம் ( சிவம் - ஞானம் - போதம் ) என்ற சொற்றொடர் சிவனின் திருவருளால் வருகின்ற மெய்யறிவைத் தரும் நூல் என்று பொருள்படும்.
- இந்நூல் தொன்றுதொட்டு வேத, ஆகமங்களிலும் சைவத்திருமுறைகளிலும் பயின்று வந்துள்ள சித்தாந்த உண்மைகளை, அறிவாராய்ச்சிக்கு ஒத்தவாறு மிகநுட்பமாக எடுத்துக் கூறுகின்றது.
- சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களையுடையது.

- இது பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என நான்கு இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது.
- 1. பிராமண இயல் - பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களும் உண்டு என்பதற்கு ஏதுக்கள் கூறுவது.
- 2. இலக்கண இயல் - முப்பொருளின் பொது இயல்பும், சிறப்பு இயல்பும் கூறுவது.
- 3. சாதன இயல் - உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கி இறைவனை அடையும் வழியைக் கூறுவது.
- 4. பயன் இயல் - இறைவனை அடையும் வழியிற் செல்வோர் பெறும் பேற்றை உணர்த்துவது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

| நூல் | கூறும் விடயம் |
|---|---|
| 1. திருவுந்தியார் | ▪ முப்பொருளிகளின் இலக்கணம்<br>▪ பயன் பயனை அடையும் நெறி |
| 2. திருக்களிற்றுப்படியார் | ▪ 63 நாயன்மார்களின் வரலாறுகளை கொண்டு வல்வினை, மெல்வினை என்பவற்றை விளக்குதல் |
| 3. சிவஞானபோதம் | ▪ பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மை.<br>▪ இறைவனின் இயல்பு<br>▪ பாசத்தினின்று இறைவனை அடையும் வழி<br>▪ முத்திப்பேறு |
| 4. சிவஞான சித்தியார் | ▪ முப்பொருள் உண்மை<br>▪ முப்பொருள் இலக்கணம்<br>▪ முத்தி |
| 5. இருபா இருப.்.து | ▪ ஆணவத்தின் குணங்கள்<br>▪ உயிரின் அவத்தைகள் |
| 6. உண்மை விளக்கம் (மனவாசகங்கடந்ததேவர்) | ▪ 36 தத்துவங்கள்<br>▪ பதியின் இயல்பு<br>▪ ஆணவம் கன்மத்தின் இயல்பு<br>▪ ஐந்தெழுத்துண்மை |
| 7. சிவப்பிரகாசம் | ▪ சித்தாந்த அத்வைதம்<br>▪ மும்மலங்கள்<br>▪ முத்தி |
| 8. திருவருட்பயன் | ▪ திருவருளின் பயன்கள் |
| 9. வினாவெண்பா | ▪ உமாபதி சிவாசாரியார் தம் குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் அறிந்த சைவசித்தாந்த உண்மைகள் |
| 10. போற்றிப்ப.்.றொடை | ▪ இறைவன் ஆன்மாவின் பாசத்தைக் கெடுத்து ஆட்கொள்ளும் தன்மை |
| 11. கொடிக்கவி | ▪ ஐந்தெழுத்து உண்மை |
| 12. நெஞ்சுவிடு தூது | ▪ பாசநீக்கம், தசாங்கம், புறசமய மறுப்புக்கள், தத்துவங்கள், உபதேசங்கள் |
| 13. உண்மைநெறி விளக்கம் | ▪ தசகாரியங்கள் |
| 14. சங்கற்பநிராகரணம் | ▪ அகச்சமய கொள்கைகளை மறுத்தல் |

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

1. ரௌரவ ஆகமப் பொருளாக விளங்குவது
   சிவஞானபோதம்

2. சிவஞானபோதத்தின் வழிநூல்
   சிவஞானசித்தியார்

3. சிவஞானசித்தியாரின் இரு பிரிவுகள்
   - பரபக்கம் - உலகாயுதம் முதல் பஞ்சராத்திரம் வரை பரசமயக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டுகிறது.
   - சுபபக்கம் - சுய மதத்தை நிறுவுதல்.

4. சிவபெருமானே உயிர்களின் பாசநீக்கத்தின் பொருட்டு மெய்கண்டாராக உலகில் தோன்றினார் எனக் கூறும் சாஸ்திர நூல்
   இருபா இருப.்.து

5. மெய்கண்டார் தம்மை ஆட்கொண்ட போது தோற்றுவித்த சித்தாந்த அனுபவங்களை அருணந்தியார் சிறப்பிக்கும் நூல்
   இருபா இருப.்.து

6. சிவஞான போதத்தின் சார்பு நூல்
   சிவப்பிரகாசம்

7. சிவப்பிரகாசத்தின் சாரமாக அமைந்த நூல்
   வினாவெண்பா

8. சிதம்பரத்தில் ஏறாது நின்ற கொடியை ஏற்றுவதற்காக உமாபதி சிவாசாரியாரால் பாடப்பட்டது
   கொடிக்கவி (கொடிப்பாட்டு)

9. உமாபதி சிவாசாரியார் தமது குருவிடம் உபதேச அனுபூதி பெற்றமையை விளக்கும் நூல்
   நெஞ்சுவிடு தூது

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# சைவ சித்தாந்தம்

சித்தாந்தம் என்பது முடிந்த முடிவு எனப்பொருள்படும். சைவம் சிவ சம்பந்தமுடையது சைவம் கூறும் உண்மைகளை முடிந்த முடிவாக கூறுவது சைவ சித்தாந்தம் ஆகும். சைவ சித்தாந்த சிந்தனை விளக்கத்துக்கு அடிப்படை பிரமாணங்கள் மூன்று அவையாவன:

- ☐ பிரதியட்சம் - காட்சியளவை
- ☐ அனுமானம் - கருதல் அளவை
- ☐ ஆப்த வாக்கியம் - நூல் அளவை

சைவ சித்தாந்தத்தின் அடிப்படை சற்காரிய வாதம் “உளது இலதாகாது இலது உளதாகாது இல்லாததில் இருந்து இல்லாததே தோன்றும்” என்ற கூற்றுகள் சற்காரியவாதத்தை விளக்கும் அடிப்படை கருத்துக்களாகும்.

சைவ சித்தாந்தம் கூறும் உலகப் பொருட்கள் மூன்று வகையாகும்.

- ☐ வரையறையுள்ள அறிவுடைய பொருள் - பதி
- ☐ வரையறையற்ற அறிவுடைய பொருள் - பசு
- ☐ அறியும் இயல்பற்ற சடப்பொருள் - பாசம்

**பதி**

**சொரூப நிலை**

**இறைவனின் இயல்புகள்**

1. குணம் குறி அற்றவர்
2. அனைத்தையும் கடந்தவர்
3. உண்மைத் தன்மையில் விளங்குவார்
4. பெயர், உருவம், வடிவம் அற்றவர்

**தடத்த நிலை**

**இறைவனின் இயல்புகள்**

1. குணம் குறியுடன் விளங்குபவர்.
2. பெயர், உருவம், வடிவம் உடையவர்.
3. மூவகைத் திருமேனியில் விளங்குபவர்.
4. ஐந்தொழிலை **(பஞ்சகிருத்தியங்கள்)** செய்வார்.

**அருவம்**

1. சிவம்
2. சக்தி
1. நாதம்
2. விந்து

**உருவம்**

1. பிரம்மா
2. விஷ்ணு
3. உருத்திரன்
4. மகேஸ்வரன்

**சதாசிவன்**

5. சதாசிவன் (சிவலிங்கத் திருமேனி)

**ஐந்தொழில்கள்**

| இல | ஐந்தொழில் | ஐந்தொழிலுக்கான வடமொழி நாமம் | ஐந்தொழில் மூர்த்திகள் |
|---|---|---|---|
| 01 | படைத்தல் | சிருஷ்டி | பிரம்மா |
| 02 | காத்தல் | திதி | விஷ்ணு |
| 03 | அழித்தல் | சங்காரம் | உருத்திரன் |
| 04 | மறைத்தல் | திரோபவம் | மகேஸ்வரன் |
| 05 | அருளல் | அநுக்கிரகம் | சதாசிவன் (சிவலிங்கம்) |

**எண்குணங்கள்**

1. முற்றுமுணர்தல்
2. இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல்
3. இயற்கை உணர்வினராதல்
4. வுரம்பில் இன்பமுடைமை
5. முடிவில் ஆற்றலுடைமை
6. பேரருள் உடைமை
7. தன்வயத்தனாதல்
8. தூய உடம்பினராதல்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

**சைவ சித்தாந்தம் கூறும் ஆன்மா**

- சைவ சித்தாந்தம் ஆன்மாக்களை பசு, ஜீவன், ஆத்மா, சதசத்து போன்ற பெயர்களால் சுட்டும்.
- ஆன்மாக்கள் எண்ணிறைந்தவை, அநாதியானவை.
- ஆன்மா பாசத்துடன் கட்டுண்ட நிலையில் பசு எனப்படுகிறது.
- ஆன்மா பாசத்துடன் சம்பந்தப்பட்ட நிலையை பெத்த நிலையை என்றும், இறைவனை சார்ந்திருக்கும் நிலையை முத்தி நிலை என்றும் கூறுவர்.
- ஆன்மாக்களுக்கு மூன்று அவத்தைகள் உள்ளன. ஆவையாவன கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை.
- பெத்த நிலையில் பசுக்கள் மூவகைப்படும். சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்.
- ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது.
- சைவ சித்தாந்தத்தில் ஆன்மாக்களுக்கு கனவு, நனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல், (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியாநீதம், துரியம்) என ஐந்து நிலைகள் கூறப்படுகின்றன.

- ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்கள் படிநிலையாக அமைகின்றன.

இருவினை ஒப்பு → மலபரிபாகம் → சத்திநிபாதம் → முத்தி

- முப்பொருட்களில் உயிர்களைப் பந்தித்து நிற்பவை பாசம் என அழைக்கப்படுகிறது. இதை மும்மலம் என்றும் சொல்வதுண்டு. மும்மலங்களாவன ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும்.

➢ **ஆன்மாவின் இலக்கணம்**

- ஆன்மா உண்மைப் பொருள்ளூ நித்தியமானது.
  "உளதில தெனடறலின் எனதுடலென்றலின்...." - சிவஞானபோதம்
- ஆன்மா என்றும் உள்ளதுளூ படைக்கப்படாததுளூ எண்ணிக்கையில் பல.
  "பிறந்த நாள் மேலும் பிறக்கு நாள் போலுந்
  துறந்தோர் துறப்போர் தொகை" - திருவருட்பயன்
- அறிவிக்க அறியும் தன்மையுடையது.

- ஆன்மா – சதசத்து என்று அழைக்கப்படும் ஏனெனில் ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் உள்ளது. அதாவது சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய மலங்களையும் சாரும்.

  ''சத்தசத்தைச் சாரா அசத்தறியா அங்கணிவை
  உய்த்தல் சதசத்தாமுயிர்'' -
  திருவருட்பயன்

- ஆன்மா அறிவு, இச்சை, செயல் என்ற உள்ளார்ந்த இயல்புகளைக் கொண்டது.
- ஆன்மாக்கள் மூவகைப்படும்.
  - ☐ சகலர் - மும்மலங்களோடு கூடியவர்கள்
  - ☐ பிரளாயகலர் - ஆணவம், கன்மம் உடையவர்கள்
  - ☐ விஞ்ஞானகலர் - ஆணவம் மட்டும் உடையவர்கள்
  - ☐ ''திரிமலத்தார் ஒன்றதனில் சென்றார்கள் அன்றி
    ஒரு மலத்ராயும் உளர்'' - திருவருட்பயன்
- ஆன்மாக்கள் ஐம்பொறிகள் மூலம் அறிவினை பெறுகின்றன.

  ''பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
  அறிவென்ற பேர் நன்றற'' - திருவருட்பயன்

- ஆன்மாவுக்கு மூன்று நிலைகள் உண்டு. அதை அவத்தை அல்லது அவஸ்தை எனவும் குறிப்பிடுவர்.

  சகலாவத்தை - மும்மலங்களோடும் கூடிய நிலை.
  கேவலாவத்தை - ஆணவத்துடன் மட்டும் கூடிய நிலை
  சுத்தாவத்தை - மலங்கள் மூன்றும் நீங்கிய அருள் நிலை

- ஆன்மாவின் அறிவை அணுத்தன்மை செய்து மறைப்பது ஆணவம்.
- ஆன்மாவிற்கு மாயையும் கன்மமும் ஆணவத்தின் மறைப்பை நீக்க வழிகாட்டுவது.
- இறைவன் ஆன்மாவின் முத்தியின் பொருட்டு ஐந்தொழில் ஆற்றுகின்றான்.

**ஆன்மாவின் முத்திக்கான சாதனைகள்**

- இலட்சியம் - முத்திப் பேறு.
- ஆன்மா முத்தியடைய பின்வரும் சாதனங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
  - ☐ சைவ நாற்பாதங்கள்
  - ☐ திருவைந்தெழுத்து, உருத்திராக்கம், திருநீறு
  - ☐ தீட்சை
  - ☐ சிவாலய சேவை
  - ☐ குரு, லிங்க , சங்கம வழிபாடு

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## ➢ சைவ சித்தாந்தம் கூறும் ஆணவம்

ஆணவம் என்ற சொல்லுக்கு அணுத்தன்மை செய்வது என்பது பொருள். அதாவது உயிர்களின் அறிவு, இச்சை, செயல் என்பவற்றை அறியவிடாமல் அணுத்தன்மைப்படுத்தும் (சிறுமைப்படுத்தும்) மலசக்தி ஆணவம் எனப்படுகிறது. ஆணவம் உயிரை அணுத்தன்மைப்படுத்தலை பிரதிபந்தம் என்பர். கன்மம் என்பது ஆணவத்தினால் விளைந்த யான், எனது என்னும் செருக்கினால் உயிரை வந்து பற்றுவது. இது ஆன்மாவின் அறிவை வீடுபேற்றை நோக்கிச் செல்லவிடாமல் மறைக்கிறது, இதனை அனுபந்தம் என்பர். மாயை என்னும் மலம் ஆன்மாவின் முற்றறிவைத் தடுத்து மயக்கத்தைத் தருவது. இது கன்மத்தோடு தொடர்புடையதாதலால் அதனை சம்பந்தம் என்பர்.

## ➢ ஆணவத்தின் மறுபெயர்கள்

அஞ்ஞானம், ஆவிருதி, தமசு, சகச மலம், இருள் மலம், பிணி, ஆசு, மூலமலம் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

## ➢ ஆணவத்தின் இயல்புகள்

ஆன்மாக்களோடு ஆணவம் சேர்வதால் ஆணவத்தின் இயல்புத் தன்மைக்கேற்ப சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படுவர். ஆணவமலம் மாத்திரம் உடைய ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் எனவும், ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களுடையவர் பிரளயாகலர் எனவும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களுடையவர் சகலர் எனவும் அழைக்கப்படுவர்.

## ➢ ஆணவத்தின் எண்குணங்கள்

புதியாகிய இறைவனுக்கு எண்குணங்களைக் கற்பிக்கின்ற சைவசித்தாந்தம் ஆணவத்திற்கும் எண்குணங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றது. அவை வருமாறு:

- ☐ விகற்பம் - தன்னைவிட பிற ஒவ்வாதெனல்
- ☐ கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்
- ☐ குரோதம் - கோபம்
- ☐ மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படுதல்
- ☐ கொலை - உயிர்களைக் கொல்லுதல்
- ☐ அஞர் - துக்கப்படல்
- ☐ மதம் - அகங்காரம் மேலிடல்
- ☐ நகை - சிரிப்பு

மேற்குறித்த எண்குணங்களை உடைய ஆணவம் ஒன்றே என்பது சைவசித்தாந்திகளது



மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

நிலைப்பாடு. ஆணவம் ஒன்றாயினும் அதற்கு பல சக்திகள் உண்டு.

- **ஆணவத்தின் தன்மை பற்றி**

**"ஒன்றதாய் அநேக சக்தியுடையதாய் உடனாய் ஆதியன்றதாய், ஆன்மாவின் தன் அறிவொடு தொழிலை ஆர்த்து நின்று போத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந்து என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே."**

என அருணந்திசிவாச்சாரியார் சிவஞான சித்தியாரில் பாடுகிறார்.

- **சைவ சித்தாந்தம் கூறும் கன்மம்**

கன்மம் என்பது வினை, ஊழ் செயல் எனவும் பொருள்படும். கன்மம் பற்றி திருமூலர் "பிறவிக்கு காரணமாக அமைவதும் பிறவித்துன்பத்திலிருந்து விடுபட உதவுவதும் கன்மம்" என்கிறார். உயிர்களின் இன்ப துன்பங்களை அனுபவிக்க வைப்பது கன்மமாகும். ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புக்கு பலவித போகங்களை தருவதும் ஆன்மாவை விட்டு நீங்காது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் செயற்படுவது கன்மமாகும்.

- **கன்மத்தின் செயல்கள்**
  - இருத்தல்
  - கிடத்தல்
  - விடுதல்
  - இயற்றல்
  - பரநிந்தை
  - மேவல்

## சைவசித்தாந்தம் மூவகை கன்மங்கள்

| | |
|---|---|
| **சஞ்சிதம்** | முற்பிறவி வினையை அனுபவிக்கும் போது அனுபவிக்கப்படாது எஞ்சியிருக்கும் வினை |
| **பிரார்த்தம்** | ஒருவன் செய்த வினையை இப்பிறவியில் அனுபவித்தல |
| **ஆகாமியம்** | பிரார்த்த வினையை அனுபவிக்கும் போது புதிதாக சேரும் வினை |

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## வினையின் பயன் அனுபவத்துக்கு வரும் மூன்று விதம்


- **தெய்வீகம்** → தெய்வம் காரணமாக வரும் கன்மம் ஆதி தெய்வீகம்
- **பௌதீகம்** → பஞ்சபூதங்களால் வரும் கன்மம் ஆதி பௌதீகம்
- **ஆத்மீகம்** → உயிர்களால் வரும் காரணமாக வரும் கன்மம் ஆதி ஆத்மீகம்


➢ **சைவ சித்தாந்தம் கூறும் மாயை**

**"நித்திமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கோர் வித்துவமாய் அசித்தாயெங்கும் வியாபிபாய்"** என சைவ சித்தாந்தம் மாயை பற்றி கூறுகிறது. அனைத்தும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் முதற்காரணமாய் அமைவது மாயையாகும் இறைவன் நிமித்தகாரணமாக இருந்து மாயையின் மூலம் உலகத்தை படைத்தான் என சைவசித்தாந்தம் கூறுகிறது.

- மாயை
  - சுத்த மாயை → சிவதத்துவம்
  - அசுத்த மாயை → வித்தியாதத்துவம்
  - சுத்தாசுத்த மாயை → ஆன்மதத்துவம்

- 36 தத்துவங்கள்
  - சிவதத்துவம் - 05
  - வித்தியாதத்துவம் - 07
  - ஆன்மதத்துவம் - 24


சிவதத்துவம்
நாதம்
விந்து
சாதூக்கியம்
ஈசுரம்
சுத்தவித்தை


வித்தியா தத்துவம்
நியதி
கலை
வித்தை
நாதம்
மாயம்
புருடன்
காலம்

| ஆன்ம தத்துவம் | | | | |
|---|---|---|---|---|
| **பஞ்சபூதங்கள்** நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் | **தன்மாத்திரைகள்** சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் | **கன்மேந்திரியங்கள்** பாணி, பாதம், உபந்தம், வாக்கு, பாயு | **ஞானேந்திரியம்** மெய், வாய், கண், மூக்கு, செவி | **அந்தக் கரணங்கள்** மனம், புத்தி, சித்தம், அகங்காரம் |

ஆணவ இருளில் கட்டுண்டிருக்கும் ஆன்மாவுக்கு தனு, கரண, புவன போகங்களை வழங்குவது மாயை. சூரிய ஒளி வரும் வரை இருளை அகற்ற விளக்கு பயன்படுவது போல ஆணவ இருளில் அழுத்திக்கிடக்கும் ஆன்மாக்களுக்கு திருவருளாகிய ஒளி கிடைக்கும் வரை மாயை விளக்கு போல அறிவு ஒளி தருகிறது.

இதனையே திருவருட்பயன்

**" விடிவாமாளவும் விளக்கணைய மாயை வடிவாதி கன்மத்து வந்து"** எனக் கூறுகிறது.

1. ''வேதாந்தம் தெளிவாம் சைவசித்தாந்தம்'' எனக்கூறியவர்
   உமாபதி சிவாசாரியார்
2. சைவசித்தாந்தக் கொள்கையின் ஆதார நூல்கள்
   வேதம், ஆகமம், திருமுறைகள்
3. சைவசித்தாந்த கருத்துக்களுக்கு ஆதாரமாக அமைந்த உபநிடதம்
   சுவேதாஸ்வர உபநிடதம்
4. சைவ சித்தாந்த இலக்கியங்களில் காலத்தால் முந்தியவை
   திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்
5. ''வினையின் நீங்கி விளங்கிய அழிவின் முதல்வன் கண்டது முதனூலாகும்'' என்ற பாடல் வழியாக சைவ சித்தாந்த கருத்துக்களை கூறும் பழந்தமிழ் நூல்
   தொல்காப்பியம்
6. உலக படைப்பிற்கு
   முதற்காரணம் - மாயை
   துணைக்காரணம் - சக்தி
   நிமித்தக்காரணம் - இறைவன்
7. சிவமூர்த்தங்கள் பற்றிய விளக்கத்தை தரும் வடமொழி நூல்
   சிவபராக்கியம்-
8. சைவ சித்தாந்தம் கூறும் இரு வகை முத்திகள்
   சீவன் முத்தி, விதேக முத்தி
9. இறைவனின் யோக வடிவம்
   தட்சணாமூர்த்தி வடிவம்
10. உயிரைப் பீடித்த மலங்களில் முதலில் நீங்குவது
    மாயை

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# இந்து அறவியல்

1. அறத்துடன் வையத்துள் சிறப்புற வாழ்வதற்கு மக்களுக்கு வழிகாட்டும் நூல்களுல் ஒன்று - **திருக்குறள்**

2. ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்று கூறும் நூல் - **நல்வழி**

3. ஆசாரமே மேலான தர்மம் எனக் கூறுவது - **மனுஸ்மிருதி**

4. துக்க நிக்கிரக சிஷ்டபரிபாலனம் என்பது - **அரசக்குரிய கடமை**

5. மாத்ரு தேவோ பவ (தாயை தெய்வமாக போற்று) என்ற ஒழக்கக் கருத்தை போதிப்பது

**தைத்திரிய உபநிடதம்**

6. உயிரினங்களின் பொருட்டு செய்யப்படும் வழிபாடு - **பூதயக்ஞம்**

7. எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது. ஏன்பதைக் குறிக்கும் வாக்கு

**யதோ தர்மஸ்ய ததோ ஜெய**

8. ஒவ்வொருவரும் வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் மேற்கொள்ள வேண்டிய கடமைகளைப் பற்றி கூறுவது. - **சுவதர்மம்**

9. இல்லாழ்க்கைக் கடமைகளை நிறைவேற்றிய பின் மறுமைப் பயன்கருதி ஆன்மீக நெறிக்கு ஆயத்தமாகும் நிலை - **வானப்பிரஸ்த நிலை**

10. ''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழி அஞ்சல் எஞ்சான்று மில்'' என்ற குறள் உணர்த்தும் கருத்து - **அறவழியில் பொருள் ஈட்டல் வேண்டும்**

11. காமாண்டக நீதிசாரம் பாடியவர் - **காமகாண்டர்**

12. வேள்வி முறைகளை பற்றி கூறும் சூத்திர நூல் - **கிரௌத சூத்திரம்**

13. மனுதர்மசாத்திரத்தை உலகில் பரப்பியவர் - **பிருகு முனிவர்**

14. அர்த்த சாஸ்திரம் என்ற நூலின் ஆசிரியர் - **கௌடில்யர்**

15. தர்மம் பற்றிய கருத்துக்களை விதிப்படி கூறுவன - **தர்மசாஸ்திரங்கள் (ஸ்மிருதி )**

14. இந்துமதத்தில் உள்ள சட்டம், நீதி அறம் பற்றிய விரிவான விளக்கங்களை கூறும் நூல் - **மனுதர்ம சாஸ்திரம்**

15. தர்மசாஸ்த்திரத்தின் மூன்று பகுதிகள் - **ஆசாரம், வியவகாரம். பிராயச்சித்தம்**

16. தர்ம சாஸ்திர இலக்கியங்கள் பொருள் கூறும் மூன்று வழிகள் - **சூத்திரம், சுலோகம், வியாக்கியானம்**

17. சுவதர்மம் ஆச்சிரமதர்மம். இராஜதர்மம் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும் தர்மம் எனக் கூறுவது. - மனுதர்ம சாஸ்திரம்

18. வேதங்கள் தர்மத்தின் மூலம் என்பதைக் கூறும் சுலோகம் - வேதோகிலோ தர்ம மூலம்

19. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்று கூறும் நூல் - **சிலப்பதிகாரம்**

20. கிருகஸ்தன் ஆற்ற வேண்டிய யஞ்ச யக்ஞங்கள் - **பிரமயக்ஞம். தேவயக்ஞம், பிதிர்யக்ஞம். பூதயக்ஞம், மானுடயக்ஞம்**

21. இல்லறத்தில் இருந்து கொண்டே ஞானியராக வாழ்ந்தவர்கள் - **இராம கிருஷ்ணபரமஹம்சர், ஸ்ரீ இராமர்**

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

22. குருகுவாசம் முடிந்து வீடு செல்லும் மாணவனுக்கு தைத்திரிய உபநிடதம் கூறும் உபதேசம் - **சத்யம் வத தர்மம் சர**

23. சத்யம் ஏவ ஜயதே (சத்தியமே வெற்றி தரும்) எனக் கூறுவது - **முண்டக உபநிடதம்**

24. அஹிம்சயே மேலான தர்மம் எனக் கூறுவது - **மகாபாரதத்தின் அனுசரணைப் பர்வப் பகுதி**

25. தர்மத்தையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்பவன் பாவங்களில் இருந்து விடுபட்டு ஆத்மீக ஞானம் அடைவான் எனக் கூறும் நூற்கள் - **புராண இதிகாசங்கள்**

26. எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது எனக் கூறும் நூல் - **பகவத்கீதை**

27.“யாவருக்கும் யாம் இறைவற்கொரு பச்சிலை” என்ற அறக்கருத்துக்களை முன்வைத்தவர் - **திருமூலர்**

28. புருடார்த்தங்கள் - **அறம், பொருள், இன்பம், வீடு அல்லது தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்**

29. நால்வகை வர்ணங்கள் - **பிராமணர், சத்திரியர், வைசீயர், சூத்திரர்**

30. நால்வகை ஆச்சிரம தர்மங்கள் - **பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரதஸ்தம், சந்நியாசம்**

31. தமிழில் உள்ள நீதி நூல்கள் - **திருக்குறள், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி**

32. காப்பு செய்யுள்களுடன் 108 கூற்றுக்களை கொண்டதும் ஒவ்வொரு கூற்றும் ஒவ்வொரு அறங்களைப் பற்றிக் கூறும் நூல் - **ஆத்திச்சூடி**

33. ஆத்திச்சூடியை முதன் முதலாக பதிப்பித்து வெளியிட்டவர் - **1848 இல் ஜே. சுதன் பாரதியார்**

34. ஆத்திச்சூடி நல்வழி ஆகிய நூற்களின் ஆசிரியர் - **ஔவையார்**

35. நல்வழி என்பதன் பொருள் - **மனிதன் நல்வாழ்வு வாழ வழிக்காட்டும் நூல் எனப் பொருள்படும்.**

36. ஆத்திச்சூடி நூலுடன் நெருங்கிய தொடர்புடைய நீதி நூல் - **திருக்குறள்**

37. அதியமானிடத்தில் நெல்லிக்கனி பெற்ற பெண் புலவர் - **ஔவையார்**

38. சாதனம் எனும் சொல்லின் பொருள் - **உபகரணம் அல்லது ஆன்மீக வழி அல்லது முழுமையடையும் வழி எனப் பொருள்படும்**

39. யோகம் என்பதன் பொருள் - **இறைவனோடு இணைதலும்,அதற்கான வழிகளும் எனப் பொருள்படும்**

40. மூவகை யோகங்கள் - **கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம்**

41. “விதிக்கப்பட்ட கருமத்தை செய், செயலின்மையை விட செயல் சிறந்தது” எனக் கூறும் நூல் - **பகவத்கீதை**

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

42. **தர்ம சாஸ்திரங்களில் கூறப்படும் அறக்கருத்துக்கள்**

- தர்ம சாஸ்திரங்களில் தனிமனிதர்களுக்கும் சமூகத்துக்கும் தேவையான அறக்கருத்துக்கள் முழுமையாகக் கூறப்பட்டுள்ளன.
- இவ்வறக்கருத்துக்கள் தனிமனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதாகவும், சமூகத்தை சீர்படுத்துவதாகவும், அமைந்துள்ளன.
- தர்மசாஸ்திரங்கள் தனிமனித தருமம், சமூக தர்மம், அரச தர்மம் என்ற அடிப்படையில் அறக்கருத்துள்ளளை விளக்கியுள்ளன.

**தர்மசாஸ்திரம் தனிமனிதனுக்கும், சமூகத்துக்கும் கூறியுள்ள கடமைகள்**

- பிராமணர், சத்திரியர். வைசியர், சூத்திரர்க்கு கூறியுள்ள கடமைகள்

பிராமணர் - ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்
சத்திரியர் - மக்களை பாதுகாத்தல், ஓதுதல், பயிர் செய்தல்
வைசியர் - வணிகம் செய்தல்
சூத்திரர் - மேற்குறிப்பிட்ட மூவருக்கும் ஊதியஞ் செய்தல்

- அவரவர்க்கு விதிக்கப்பட்ட கடமைகளை அவரவர் ஆற்ற வேண்டிய விதியாகும்.
- வாழ்க்கையின் நான்கு படிகளான பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பவற்றுக்குரிய தனித்தனி கடமைகள் கூறப்பட்டுள்ளன.
- தனிமனிதன் கடைபிடிக்க வேண்டிய சாதாரண தர்மங்கள் கூறப்பட்டுள்ளன. அவை தூய்மை, தன்னடக்கம், பற்றின்மை, சத்தியம், அஹிம்சை. போன்ற ஒழுக்கங்களாகும்.
- ஆன்ம ஈடேற்றத்துக்கான ஒழுக்கங்களும் கூறப்பட்டுள்ளன.

**தர்மசாஸ்திரம் கூறும் அரச தர்மம்**

- அரச தர்மத்தின் காவலன் என்ற வேதக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அரச தர்மம் பற்றிய விதிகளை சட்டங்களாக வகுத்துத் தந்தவை தர்மசாஸ்திரங்கள்
- தர்ம சாஸ்திரத்தின் ஒரு அங்கமாக விளங்கும் வியவகார காண்டம் அரசநீதி பற்றி கூறும் பகுதியாகும்.
- தர்மசாஸ்திரம் கூறும் ஆட்சி முடியாட்சியாகும்.
- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற சிலப்பதிகார கூற்றுக்கு அடிப்படையாக தர்மசாஸ்திரம் அரசன் தர்மத்திலிருந்து விலகிச் செல்வது தண்டணைக்குரியது என்கிறது.
- மன்னன் தன் தவவலிமையால் அரச பதவியை பெறகிறான் என நாரதஸ்மிருதி

கூறுவதற்கு இணங்க தர்மத்தை நிலை நாட்டுவதும் குடிகளை காப்பதும் மகாயாகத்துக்கு ஒப்பாகும். அரசன் அட்டதிக்கு பாலகரின் அம்சமென ஸ்மிருதிகள் கூறுகின்றன. இது அரசனுக்குரிய கடமைகளையும், இயல்புகளையும் விளக்க கூறப்பட்டது.

- மனுதர்மசாஸ்திரத்தில் அரசனின் கடமைகள், பொறுப்புகள், நீதிபரிபாலனம், நிருவாகம், வரி அறவிடுதல், படைமாட்சி பற்றி கூறப்பட்டுள்ளன.
- கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் மனுதர்மத்தை ஒத்ததாகவே உள்ளது.
- மனுஸ்மிருதி அரசன் வேதம், பொருளியல் தத்துவம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றவனாகவும் அதன்படி ஒழுக வேண்டும் எனவும் கூறுகிறது. இங்கு அரசனுக்குரிய பண்புகளாக ஒழுக்கம், கல்வி, வீரம் சாதுரியம், என்பன கூறப்பட்டுள்ளன. அரசன் இச்சை. பேராசை, கோபம் என்பவற்றை தவிர்க்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அரசனின் அன்றாடக் கடமைகள், குடிநலன் காத்தல் விரிவாக கூறப்பட்டுள்ளது. அரசன் தவறிழைக்கும் பட்சத்தில் வழங்கப்படும் தண்டணையும் கூறப்பட்டுள்ளது. தர்ம விதிகளின் படி ஆட்சி புரியும் மன்னனது ஆட்சியின் கீழ் சமூக ஒழுங்கும், சமூக நல்லிணக்கமும் பாதுகாக்கப்படும் என்பது மனுதர்மசாஸ்திரத்தின் கருத்தாகும்.

**சட்டமும் நீதியும்**

- இந்துக்களுக்குரிய நீதிமுறை பற்றி மனுதர்மம் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டெழுந்த யாக்ஞவல்லியார், நாரதர், பிருகஸ்பதி ஆகியோரின் ஸ்மிருதிகள், அர்த்த சாஸ்திரம் என்பவற்றில் காணலாம்.
- தர்மம் (மறை நூல் வழக்கு) வியவகாரம் ( ஒப்பந்தம்) சாரித்திரம் (மேலோர் வழக்கு) ராஜசாசனம்(அரசனின் கட்டளைகள்) என்ற நான்கும் இந்து சட்டத்துக்கு மூலமானவை.
- நீதி மன்றத்தில் அரசன் தலைவனாவான். பரிவுத் எனும் சபை நீதி பரிபாலனத்துக்கு பொறுப்பு எனக் கூறப்படுகிறது. வழக்குகள், குற்றங்கள், குற்றங்களுக்கான தண்டணைகள் கூறப்பட்டுள்ளது. குற்றங்களுக்கு நீதியில்லாத தண்டணை வழங்கும் அரசன் அபகீர்த்திக்கு ஆளாவான் என கூறப்படுகிறது. தற்கால நீதி பரிபாலனத்துக்கு அடிப்படையாக அமைந்தவை தர்ம சாஸ்திரங்களாகும்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# தமிழில் நீதி நூல்கள்

"திடமான சிந்தையும் தளராத எண்ணமும் தளம்பாத செய்கையும் தவறாத நீதியும் கொண்ட சான்றோர்கள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய அருள்வாக்குகளை நமக்கு தந்துள்ளனர். மனித சமுதாயத்தை சீர்படுத்துவதற்காக திருவள்ளுவர், ஔவையார் போன்றோர் உளவியலாளராக, மெய்ஞ்ஞானியாக, விஞ்ஞானியராக, நீதிமானாக மேற்கொண்ட தொண்டுகள் அளப்பரியன.

நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு என்பது ஔவையாரின் வாக்கு - இதன் பொருள் நீதி நூல்களில் கூறப்பட்டுள்ள நீதிமுறைகளை அறிந்து நல்லொழுக்கத்துடன் வாழவேண்டும் என்பதாகும். அவ்வகையில் நல்லொழுக்கத்துடன் வாழ வழிகாட்டும் தமிழ் நூல்களாக திருக்குறள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் என்பவற்றை கூறலாம்.

## திருக்குறள்

- தமிழில் தோன்றிய அறநூல்களுள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய கருத்துச் செறிவுள்ள நீதிநூல் திருக்குறள்.
- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருவள்ளுவரைப' பொய்யாமொழிப்புலவர், தெய்வப்புலவர், செந்நாப்போதர் முதலிய பல பெயர்களால் போற்றுவர்.
- திருக்குறளை முப்பானூல், பொய்யாமொழி, தமிழ்மறை, உலகப் பொதுமறை, தெய்வநூல் முதலிய சிறப்புப் பெயர்களால் வழங்குவர்.
- குறள் வெண்பா வகையால் எழுதப்பட்ட இந்நூல் 133 அதிகாரங்களை உடையது. அதிகாரங்கள் ஒவ்வொன்றும் பத்துக் குறள்களை உடையன.
- திருக்குறளில் 1330 (133 ழூ 10) கறட்பாக்கள் உடையன.
- திருவள்ளுவர் திருக்குறளில் ஒழுக்கத்துக்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளார். சழக்கு, தண்டம் முதலியன உயிர்க்கு உறுதிபயத்தலில் சிறப்பில. ஆதலால் அவற்றை ஒழித்து சிறப்புடைய ஒழுக்கமே அறம் எனக் குறிப்பிடுகிறார்.
- இந்து அறவியலில் முக்கியத்துவம் பெறும் புருடார்த்தங்களான அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு திருக்குறள் பாடப்பட்டுள்ளது. இதனால் இந்நூல் முப்பானூல் எனப்பட்டது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

- திருக்குறளின் வைப்புமுறை பற்றி நோக்கும் போது இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளை உடையது.

  **அறத்துப்பால் - 38 அதிகாரங்கள்**

  **பொருட்பால் - 70 அதிகாரங்கள்**

  **காமத்துப்பால் - 25 அதிகாரங்கள்**

- முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்து ஆகும். இதில் 'கற்றதனாலாயபயன் கடவுளை வணங்குதல்' எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, இங்கு திருவள்ளவர் 'அறவாழி அந்தணன்' எனக் குறிப்பிட்டுள்ளமை இந்நூல் அறத்துக்கு வழங்கும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.
- திருக்குறளின் நாலாம் அதிகாரம் அறன் வலியுறுத்தலாகும். அறமானது, இம்மை, மறுமை, வீடு பயத்தலால் ஏனைய பொருளையும் இன்பத்தையும் விட வலிமையானது என்பது விளக்கப்படுகிறது. இவ்வதிகாரத்தில் மனத்துக்கண் மாசிலனாதலே அனைத்து அறங்களுக்கும் அடிப்படை என்பது உறுதிபடக் கூறப்படடுள்ளது.
- அறத்துப்பால் இல்லறம், துறவறம் என இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவ்விரு அறங்களுள்ளும் இல்லறமே ஏற்புடையது எனவும், இல்லறத்தைச் சார்ந்தே துறவறம் உள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

  உ + ம்: 'துறந்தார்க்கும்…'
- இல்லறவியல் குடும்பத்தின் பொது முக்கியத்துவம் பற்றியது. குடும்பத்தில் ஆணின் துணையாகவே பெண் பேசப்படுகிறாள். நன்மனையாளின் இயல்பு, பிள்ளைப்பேறு, அன்பு, விருந்தோம்பல் முதலிய இல்லறத்தானுக்குரிய பண்புகளும் தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய இன்சொல், நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை முதலிய பல பண்புகளும் கூறப்படுள்ளன.
- துறவறவியலில் துறவுக்கு அடிப்படையாய் அமையும் அருள் உடைமை என்பது முதலிலும் துறவி கைக்கொள்ள வேண்டிய புலான் மறுத்தல், தவம், வாய்மை, வெகுளாமை முதலிய பல விடயங்களும் விளக்கப்பட்டுள்ளன.
- துறவறவியலில் இறுதி நான்கு அதிகாரங்களிலும் துறவின் பயனாகிய ஞானம் அதாவது வீடு பயக்கும் உணர்வினைக் கூறுகிறார்.

  உ + ம்: 'பற்றுக பற்றற்றான் பற்றினை…'
- இல்லறம், துறவறம் ஆகிய இருநெறியில் நின்றாலும், செய்வினையின் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்பதால் திருவள்ளுவர் அறத்துப் பாலின் இறுதியில் 'ஊழ்' எனும் அதிகாரத்தை வைத்துள்ளார்.

உ + ம்: 'ஊழிற் பெருவலி யாவுள…'

- பொருட்பாலில், பொருளை ஈட்டுவதற்கும், அனுபவிப்பதற்கும், துணைக்காரணியாக அரச நீதியைப பற்றி விளக்குகிறார்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

- இறுதியாக காமத்துப்பாலில், உலகியல் இன்பத்தை அறத்தின்வழி அனுபவித்தல் பற்றி கூறுகின்றார். காமம் என்பது இங்கு இன்பம் என்ற பொருளில் கொள்ளப்படுகிறது.
- "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" எனும் ஔவை வாக்கினை இது விளக்குகிறது. அறத்தின் வழநின்று பொருளைத் தேடி இதனைத் துய்ப்பதன், இம்மை பயப்பதாகிய உலகியல் இன்பத்தை விபரிக்கிறார்.

## ஆத்திச்சூடி

- தமிழில் தோன்றிய நீதி நூல்களுள் பாலர், பாமரர், பண்டிதர் என உள்ள யாவரும் படிப்பதற்கேற்ற நூல்களாக விளங்குபவை ஔவையார் இயற்றிய ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களாகும்.
- இவற்றுள் ஆத்திச்சூடியும் கொன்றை வேந்தனும் அறக்கருத்துக்களை இரண்டு மூன்று சொற்களால் விளக்கும் கட்டளை மொழிகளாக அமைந்தவை.
- ஔவையார் பாடிய ஆத்திச்சூடி நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல். 'ஆத்திச்சூடி' எனத் தொடங்குவதனால், அதுவே நூலுக்கும் பெயராயமைந்த சிறப்பினை உடையது.
- ஆத்திச்சூடி மிகச் சிறிய நூலாகும். காப்புச் செய்யுளோடு 108 கூற்றுக்களைக் கொண்டது. ஆத்திச்சூடியின் ஒவ்வோர் அறங்களாக மொத்தம் 108 அறங்களைக் கூறுகிறது. இதனால் அஷடோத்திர நீதிநூல் எனவும் சிறப்பித்துக் கூறுவர்.
- ஆத்திச்சூடியின் காப்புச் செய்யுள் (கடவுள் வாழ்த்து) சிவபெருமானைப் போற்றுகிறது. ஆத்திச்சூடி தமிழ் நெடுங்கணக்கு முறையிலமைந்த நூலாகும். தமிழில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை முதலாகவும் அவ்வாறு வராத எழுத்துக்களை இரண்டாம் எழுத்தாகவும் கொண்டு பாடப்பட்டுள்ளது. ஆத்திச்சூடியை 1848 இல் ஜே. சுதன் பாதிரியார் முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டார்.
- ஆத்திச்சூடி பொருள்பொதிந்த வாக்கியங்களாலானது. கருப்பொருள் அமைதி உடையது. இதனாலேயே இந்நூலுக்குப் பலர் உரையெழுதியுள்ளனர்.
- இப்போது கிடைக்கும் உரைகளுள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் உரை பரிமேலழகர் உரை எனப்படுகிறது. இது பற்றிய கருத்து வேறுபாடுகளும் உள. இதன்பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய உரையே காலத்தால் முற்பட்ட உரையாகக் கிடைக்கிறது.
- இந்நூலுக்குப் பல உரைநூல்கள் எழுந்தது போலவே பல சார்பு நூல்களும் வழிநூல்களும் தோன்றியுள்ளன. புதிய ஆத்திசூடி, ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடிப் புராணம், ஆத்திசூடிச் சிந்து, ஆத்திசூடி அகவல், ஆத்திசூடிக் கதைகள் போன்றனவாகும்.

  உ + ம்: பாரதியாரின் புதிய ஆத்திசூடி இராமபாரதியின் ஆத்திசூடி வெண்பா
- ஆத்திசூடியின் பொருள்மரபை நோக்கும்போது அது வேத உபநிடதக்

கருத்துக்களின் சாரமாக அமைந்துள்ளது. முானிட வாழ்க்கையின் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் புருடார்த்தங்களையும் எடுத்து விளக்குகின்றது.

உ + ம்: அறம் செய விரும்பு''

பொருள்தனைப் போற்றிவாழ்''

மெல்லிநல்லாள் தோள்சேர்''

வீடு பெறநில்''

- ஆத்திசூடியின் கூற்றுக்களுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. திருக்குறளில் பல அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் இந்நூலில் ஓரிரு சூத்திரங்களில் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

உ + ம்: நன்றி மறவேல்''
ஞயம்பட உரை''
ஊக்கமது கைவிடேல்''

- ஒரு மனிதன் மனம், மொழி மெய்களால் அறத்தின் வழிநின்று சீர்பெற வழிகாட்டும் நீதிநூலாகவும் விளங்குகின்றது. அறத்தின் மென்மை, ஈகைச்சிறப்பு, கல்வியின் அவசியம், உழைத்து வாழல், உலகத்தோடொட்ட ஒழுகல், நல்ல நட்பு, செய்ந்நன்றி மறவாமை, ஒழுக்கம் பேணல், ஆன்மீக இலட்சியம் ஆகிய கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.
- ஆத்திசூடி இந்து அறவியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் நூல் மட்டுமன்றி, இந்து தத்துவ சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டது என்பர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தமது உரைகளில் இந்து தத்துவங்களின் அடிப்படையில் விளக்கமளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உ+ ம்: ஓதுவது ஒழியேல்''

பேதமை அகற்று''

தூக்கி வினை செய்''

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# புருடார்த்தங்கள்

மனித வாழ்வை மேம்படுத்துவதற்காக இந்து சமயம் வகுத்து தந்த அறநெறி முறைகளுள் புருடார்த்தங்களும் ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக இலட்சியத்தை அடைய வாழ்க்கையின் நான்கு நிலையிலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் இப்புருடார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

புருடார்த்தங்கள் என்பவை மனிதனால் அடையப்பட வேண்டிய செல்வங்கள் எனப்படும். இவை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனப்படும். இதனை அறம், பொருள், இன்பம், வீடு என்பர்.

வாழ்வின் இலட்சியத்தை அடைய அறத்தின் வழிநின்று அவ்வழியிலே பொருளைத் தேடி வாழ்க்கையினை அனுபவிக்க வேண்டும் என்பதே புருடார்த்தங்களின் குறிக்கோளாகும். இதன் வழி வீடுபேறு சிந்திக்கும் என்பது ஆன்றோர் வாக்காகும்.

## அறம்

- இந்து மரபிலே வலியுறுத்தப்படும் உயர்ந்த அறநெறிகள் புருடார்த்தங்களாகும். புருடார்த்தங்களில் அறமே பிரதானமானதாக முதனிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதுவே யாவருக்கும் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

- அறம் தர்மம் எனவும் பொருள்படும்.

- தர்மம் ''த்ரு'' என்ற வடமொழி வினையடியிலிருந்து தோன்றியது. இதன் பொருள் வைத்திருத்தல், போதித்தல், காப்பாற்றுதல், தாங்கிக் கொண்டிருத்தல் முதலியனவாகும்.

- வேதங்களில் அறமே அடிப்படை, ''வேதோ கிலோ தர்ம மூலம்'' தர்மத்தின் அடிப்படை வேதங்களே என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றன. உபநிடதங்களில் அறம் பற்றி பலவாறு கூறப்பட்டுள்ளது.
    - பிருகதாரணிய உபநிடதத்தில் - தர்மம் சத்தியம் (உண்மை)
    - தைத்திரிய உபநிடதத்தில் - சத்யம் வத தர்மம் சர
    - முண்டக உபநிடதம் - சத்யம் ஏவ ஜயதே (சத்தியமே வெற்றிப் பெறும்)
    - பகவத்கீதை - அதாவது தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளை செய்யும் போது இறத்தலே நன்று என கூறுகிறது.
    - மனுஸ்மிருதி - ஆசாரமே மேலான தர்மம்
    - மகாபாரதம் - அஹிம்சையே மேலான தர்மம்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## இதிகாசங்களில் அறம்

- மகாபாரதம், இராமாயணம் எனும் இதிகாசங்கள் தருமத்தின் வழி இவ்வுலகில் வாழ்வதற் கேதுவான வழிகாட்டல்களை உள்ளடக்கி உள்ளன. மகாபாரதத்தில் தருமனும், இராமயணத்தில் இராமனும் தருமத்தின் வழி வாழ்ந்தவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். தர்மம் தன்னைக் கொன்றவனைக் கொல்லும். அது தன்னைப் பாதுகாத்தவனைக் காக்கும்.
    - ❖ "தர்மம் ஏவ ஹதே ஹந்தி"
    - ❖ தர்மம் தலைகாக்கும்"
    - ❖ "அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்"
- மகாபாரதம் அஹிம்சையே மேலான தர்மம் எனக் கூறுகிறது.
- புராணங்களில் போதிக்கப்படும் ஒழுக்கம், தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். புராணங்கள் சாதாரண தர்மம், விசேட தர்மம் என இரு வகைத் தர்மங்கள் பற்றிக்கூறுகின்றன.
- தர்ம சாஸ்திரங்களில் அறமே கருப் பொருளாகும். தர்ம சாஸ்திரங்களில் தர்மம் கடமை, ஒழுக்கம் என்ற கருத்தில் காணப்படுகின்றது. சுவதர்மம் ஆச்சிரம தர்மம், இராஜதர்மம் என்ற அடிப்படையில் கூறப்பட்டுள்ளன.
    - ❖ சுவதர்மம் - குல தர்மம் எனப்படும். ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை செய்தலைக் குறிக்கும்.
    - ❖ ஆச்சிரம தர்மம் - வாழ்க்கையில் நான்கு நிலைகளில் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் பற்றியது.
    - ❖ இராஜ தர்மம் - நீதி பரிபாலனம், சமூக நலன்களை பற்றி கூறப்படுகின்றது.
- தமிழ் நூல்களில் அறம் பற்றி கூறப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் அறம் பற்றிய கூற்று

  "அறம் துஞ்சும் செங்கோல்" (புறம்)

  "அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்" (சிலப்பதிகாரம்)
- திருக்குறள் அறம், பொருள், இன்பம் அடிப்படையாகக் கொண்ட நூல் இதன் நான்காவது அதிகாரம் அறன் வலியுறுத்தல் ஆகும்.

  "அறத்தால் வருவதே இன்பம்

  அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை

  என அறத்தின் சிறப்பினை வலியுறுத்துகின்றன. திருவள்ளுவர் அறத்தினை இல்லறம், துறவறம் என இரு வகையில் கூறியுள்ளார்.
- சங்கமருவிய காலத்தில் பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை அறநூல்கள் ஆகும். ஔவையார் "அறம் செய விரும்பு என கூறியுள்ளார்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

- இவ்வாறாக இந்துக்களின் வாழ்வின் எல்லா நிலைகளிலும் அம்சங்களிலும் தர்மம் தலையாய இடத்தினை வகித்துள்ளது.

## பொருள்

பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்ற கூற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ பொருள் அவசியம் என்பதை உணர்த்துகிறது. தனிமனிதனதும் சமூகத்தினதும் மேம்பாட்டுக்கு பொருள் அவசியமாகும். அறத்தின் வழிநின்று பொருளை ஈட்டினால் அதனைக் கொண்டு அறம் செய்து அதன்வழி இன்பத்தை அனுபவித்து ஈடேற்றம் பெறலாம். அர்த்த சாஸ்திரம், திருக்குறள் என்பன பொருளீட்டல் பற்றி நிறைவாகக் கூறியுள்ளன. பொருளை தேடும் போது அறத்தின் வழியிலேயே தேட வேண்டும். இதனையே ஔவையார் "தீவினை விட்டீட்டல் பொருள் என்கிறார். திருவள்ளுவர் "பழியக்கி பாத்தூண் உடைத்தாயின் வழியஞ்சல் எஞ்சான்றும் இல்" என்கிறார்.

- பாவங்களுக்கு அஞ்சி நேர்மையான வழியில் பொருள் ஈட்டினால் அச்சமின்றி வாழலாம் என்பதே இதன் பொருள். இராஜசேவை, வாணிபம், விவசாயம் என்பவற்றால் பொருளீட்டலே சிறப்பு என அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. அறவழியில் ஈட்டிய பொருளைக் கொண்டு தர்மம் செய்ய வேண்டும். இல்வாழ்வான் இயல்புடைய மூவருக்கும் துணை செய்ய பஞ்சயக்கம் செய்ய பொருள் அவசியமாகும். அறவழியில் ஈட்டிய பொருளைப் பிறருடன் பகிர்ந்து உண்ணுதலே இன்பமாகும்.

## இன்பம்

இன்பமானது சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும். அழியும் பொருட்களால் அடையப்படும் இன்பம் சிற்றின்பமாகும். இல்லற வாழ்வில் முறையான இன்பத்தை அனுபவித்தல் சிற்றின்பம். ஔவையார் "காதலரிருவர் கருத்தொருபித்து ஆதரவுபட்டதே இன்பம் என்றார். வள்ளுவன் வாசுகி இல்லற இன்பத்துக்கு சிறந்த உதாரணமாகும். இறை இன்பத்தில் நினைத்து ஆன்மீக அனுபவம் பெறல் பேரின்பமாகும்.

### வீடு

ஆன்ம இலட்சியத்தின் இறுதிப்பேறு வீடு ஆகும். இது மோட்சம் எனப்படும். அறம் செய்து அதன் வழி பொருள் தேடி இன்பத்தை அனுபவிக்கும் போது அமைவது வீடு பேறு. இதனை ஔவையார்

ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள்
காதலரிருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்
பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்பம்

என்றார். துன்பங்களில் இருந்து விடுபடுவதே வீடுபேறு ஆகும்.

## ஆச்சிரம தர்மம்

மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு இந்து சமயத்தால் வகுத்து தரப்பட்ட வாழ்க்கையின் படிநிலைகள் ஆச்சிரம தர்மமாகும். மனித வாழ்வின் படிநிலைகளாவன பிரம்மச்சரியம் கிருகஸ்தம், வானபிரஸ்தம் சந்நியாசம் எனப்பனவாகும். ஆச்சிரம தர்மம் மனித வாழ்வை மேம்படுத்தும் வழிகள் பற்றிய விளக்கம்.

1. மனித வாழ்வின் நான்கு படி நிலைகள்

பிரம்மச்சரியம் (மாணவ நிலை), கிருகஸ்தம் (இல்லற நிலை), வானபிரஸ்தம் (காட்டில் வசிக்கும் நிலை), சந்நியாசம் (துறவு நிலை)

2. பிரம்மச்சரியம்

மனித வாழ்க்கையின் முதலாவது படி பிரம்மச்சரியம் ஆகும். பிரம்மம் என்பது மெய்ப்பொருள். மெய் பொருளை நோக்கி மாணவனை அழைத்து செல்லும் கல்வி முறைமை பிரம்மச்சரியமாகும். கல்வியும் ஒழுக்கமும் நிறைந்த வயது பருவமே பிரம்மச்சரிய நிலை. மாணவன் குருவின் இல்லம் நாடிச்சென்று குருவை தெய்வமாக மதித்து குருவிற்கு பணிவிடை செய்து கல்வி கற்றல் வேண்டும். இங்கு வேதம், அரசியல், பொருளியல், வில்வித்தை போன்ற கல்வி முறை அளிக்கப்பட்டது. கல்வி முடிந்த பின் தன்னால் ஏன்ட தற்சிணையை வழங்கி இல்லம் செல்வர்.

தைத்திரிய உபநிடதத்தில் மாணவனுக்குரிய அறிவுரையாக சத்தியத்தை பேசுங்கள், அறச்செயல்களை செய்யுங்கள் படித்தலை ஒதுக்கி தள்ளிவிடாதீர்கள் என உபதேசிக்கப்பட்டது.

3. கிருகஸ்த நிலை

இது வாழ்க்கையின் இரண்டாவது படி நிலையாகும். தனது கல்வி பருவத்தை நிறைவு செய்த ஒருவன் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையைத் தன் மனைவியாளோடு மேற் கொள்ளும் நிலை. கிருகஸ்தம் அறத்தை அடிப்படையாக

கொண்ட நிலை. குடும்ப தலைவன் தன் வீட்டிலிருந்து தன் மனைவியின் அனுசரணையோடு சமய சமூக குடும்ப அறங்களை ஆற்றுவதனால் குடும்ப வாழ்வு இல்லறம் எனப்படுகிறது.

4. கிருகஸ்தன் ஆற்ற வேண்டிய பஞ்சயக்ஞங்கள்

- பிரமயக்ஞம் - பிரமயக்ஞம் என்பது மேலான பரம் பொருளை வழிபடுதலாகும். தேவாரம், திருவாசகங்களாலும், திருமுறைகளாலும் போற்றப்படுவதாகும்.
- தேவயக்ஞம் - தேவயக்ஞம் என்பது தேவர்களுக்கு ஆற்றும் வழிபாடு, நன்றியுணர்வில் செய்யப்படுவது.
- பிதிர்யக்ஞம் - பிதிர்யக்ஞம் என்பது இறந்து போன மூதாதையர்களின் ஆன்ம சாந்தியின் பொருட்டு சிரார்த்தச் சடங்கினை நடத்துதல், பிதிர்லோகத்
- பூதயக்ஞம் - பூதயக்ஞம் என்பது விலங்கு பறவை போன்ற உயிரினங்களின் பொருட்டு செய்யப்படும் வழிபாடு. குறிப்பாக வீட்டில் உள்ள உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும்.
- மானிடயக்ஞம் - மானிடயக்ஞம் என்பது மானிடர் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு, வீட்டில் நடைபெறும் பிறப்பு, திருமணம் போன்றவற்றின் போது விருந்தினரை உபசரித்தல் முதலான சடங்குகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். மேற் கூறியவற்றுடன் புதல்வரைப் பெறுதலும் இல்வாழ்வானுக்குரிய கடமையாகும்.

5. வானப்பிரஸ்த நிலை

வாழ்க்கையின் மூன்றாவது படிநிலை இதுவாகும். இல்லாழ்வான் தனது இல்லற தருமத்தைத் தொடர்ந்து நடத்தி, பிள்ளைப் பேறுகள் பெற்று, இல் வாழ்க்கையின் கடமைகளை நிறைவு செய்தபின் மனைவியோடு வனஞ் சென்று செபம், தவம், தியானம் முதலியவற்றில் ஈடுப்பட்டு ஆன்மீக இலட்சியத்தை அடைய முயற்சிப்பது வானப்பிரஸ்தமாகும்.

6. சந்நியாசம்

வாழ்க்கையின் இறுதிபடிநிலை இதுவாகும். சந்நியாசம் என்பது முற்றும் துறத்தல் எனப்படுகிறது. உலகப் பற்றுகளையெல்லாம் ஒருங்கே துறந்த நிலையில் ஊர்தோறும் சென்று யாசகம் பெற்று ஆன்மீக இலட்சியத்தை அடையும் வகை வாழ்தலாகும்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

இன்னிலையில் விருப்பு வெறுப்பு அற்றவனாய் நாடு இனம் என்ற குறுகிய வட்டத்தை கடந்து விடுதலைப் பெற்ற மனிதனாய் வாழ்வான். இந்நிலை இறைவனுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து இறை இன்பத்தில் திளைக்கும் நிலையாகும்.

7. இன்றைய நிலையில் ஆச்சிரம தர்மங்கள்

- இவ் ஆச்சிரம தர்மங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து படிப்படியாக அதனின்றும் விடுப்பட்டுப் பரம்பொருளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு வகுக்கப்பட்டவையாகும்.அவைதிக மதங்களின் துறவொழுக்கங்களுக்கு ஆட்படாது இயல்பான வாழ்க்கையைப் படிமுறைக் கிரமமாக ஆற்றி, உன்னதமான பரத்தை அடைவதற்கான வழியாகவே அக்கால கட்டத்தில் வகுத்தனர்.

- இன்றைய நிலையில் ஆச்சிரம தர்மங்கள் இயந்திரவியல் உலகில் இலத்திரனியல் பயன்பாட்டாலும் விஞ்ஞானத்தின் விந்தைகளாலும் மனித வாழ்க்கையின் நடைமுறைகள் நாளுக்கு நாள் மாறுபட்ட வண்ணம் உள்ளன. மாறுபாடு அடைகின்ற வாழ்க்கை முறைக்குள் ஆங்காங்கே மதங்கள் எடுத்தியம்பும் ஆச்சிரம தர்மங்களை ஓரளவுக்குக் காணமுடிகிறது. இன்றைய சமூகத்தில் பிரம்மச்சரிய நிலையில் பிரம்மச்சரிய கடமைகளும் கிருகஸ்த நிலையில் கிருகஸ்த கடமைகளும் நிறைவேற்றப்பட்டு வருவதை அவதானிக்கலாம். வானப்பிரகஸ்த நிலையும் சன்னியாச நிலையும் ஒரு சிலரால் பின்பற்றப்படுகின்றன.

## **இந்துக்கல்விப் பாரம்பரியம்**

இந்துக்கல்விப் பாரம்பரியம் குருகுலக் கல்வியை அடிப்படையாகக் கொண்டதாகும். குருகுலக்கல்வியானது இந்துசமய நெறி, இறை நம்பிக்கை குருபக்தி ஆச்சிரம வாழ்வு, வாழ்வியல் ஆன்மீகம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

- பழங்காலத்தில் குருவும் சீடர்களும் ஆற்றோரங்கள் மலையடிவாரங்கள் மரநிழல்கள் என்பவற்றின் கீழ் வேதங்களை ஓதினர்.
- புராதன காலக் கல்வி முறைகளை மனனஞ் செய்தல் வினாவிடை முறை, கலந்துரையாடல் முறை செய்முறை போன்றனவாகும்.
- குருகுலக்கல்வியின் உன்னத நிலையை உபநிடதங்களில் காணலாம்.
- புராண இதிகாசங்களில் முனிவர்களின் ஆச்சிரமங்களே கல்விக்கூடங்களாகும்.
- வேதங்களில் உபநிடதக்கல்வியுடன் வில்வித்தை, மருத்துவம், வானியல், சோதிடம், இலக்கணம் என்பன கற்பிக்கப்பட்டன.
- இதிகாசங்களில் முனிவர்களின் ஆச்சிரமங்களிலும், அரண்மனைகளிலும் கல்வி

போதிக்கப்பட்டது. (இராமர், வசிட்டரின் ஆச்சிரமத்தில் கற்றார். கேளரவர்களும், பாண்டியரும் அரண்மனைக் கல்வி கற்றனர்.)

- வட இந்திய கல்விச்சாலைகளாக விளங்கிய நகரங்கள் காசி, நாலந்தா, உஜ்ஜயினி, பாடலிபுரம் இவை பிற்காலத்தில் பல்கலைக்கழகங்களாக விளங்கின.
- சங்கமறுவிய காலத்தில் சமண, பௌத்த துறவிகள் பள்ளிகள் அமைத்தனர்.
- பல்லவ பாண்டிய காலத்தில் கல்விக் கூடம் **கடிகை** என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
- சோழர் காலத்தில் கோயில்கள் கல்விக்கூடங்களாக விளங்கின. உ_ ு ம்: தஞ்சைப் பெருங் கோயிலில் சரஸ்வதி மண்டபம், வக்காளிப்பு மண்டபங்கள், வியாகரண மண்டங்கள், தேவார சுற்றும் கல்லூரிகள்.
- நாயக்கர் காலத்தில் திருவாவடுதுறை ஆதீனம் தர்மபுர ஆதீனம் என்பன.
- 19ம் நூற்றாண்டில் இந்து மக்களிடையே ஏற்பட்ட சமய, சமூக விழிப்புணர்ச்சியின் காரணமாக பல நிறுவனங்கள் தோன்றி கல்விப் பணி மேற்கொள்ளப்பட்டது.

1. இந்துக்கல்விப் பாரம்பரியம் எதனை அடிப்படையாகக் கொண்டது.
   குருகுலக்கல்வியை
2. குருகுலக்கல்வி பற்றி கூறும் வேதப்பகுதி எது?
   இருக்கு வேத பிரமச்சரிய சூக்தம்
3. குருதட்சனை வழங்கும் சீடனை எவ்வாறு அழைப்பர்?
   ஸ்நாகதன்
4. குப்தர்கால கல்வி நிலையங்கள் எவை?
   பீகார், நாலந்தா, வல்லபி
5. சங்க இலக்கியங்களில் கல்வியின் முக்கியத்துவம் எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?
   புறநானூற்றில்

6. குருகுல வாசத்தின் போது மேற்கொள்ளவேண்டிய விடயங்கள் எவை?
   குருகுலவாசம், குரு சேவை, குருபக்தி, குருதர்மம், அமைதி, அடக்கம், பிராணாயாமம், சந்தியாவந்தனம், ஓதுதல், ஓதுவித்தல்
7. சீன யாந்திரிகள் யுவான் சிங்கின் குறிப்புகளில் சிறப்பித்துக் கூறப்பட்ட கல்வி நிலையம்?
   நாலந்தா
8. வேதத்தின் ஆறு அங்கங்களும் எவை?
   1.சிட்சை 2. வியாகரணம் 3. நிருத்தம் 4.சோதிடம் 5. குற்பம் 6. சந்தோ விரிதி
9. இதிகாசத்தில் கூறப்பட்ட அரண்மனைக்கல்வி முறையில் அடங்குபவை?
   அரசியல், அரச நிர்வாகம், நீதிபரிபாலனம், வில்வித்தை, குதிரையேற்றம்,

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

யானையேற்றம், மல்யுத்தம், வான்பயிற்சி, தர்க்கம், இலக்கியம், இலக்கணம், வானியல், சோதிடம் கலைகள்

10. இந்துக் கல்வியின் பொதுவான ஐந்து நோக்கங்களும் எவை?

    1. தனியார் நோக்கம் 2. சமூக நோக்கம் 3. அரச நோக்கம்
    4.பொருளாதார நோக்கம் 5. தொழில்சார் நோக்கம்

11. இந்துக் கல்வியின் பொதுவான ஐந்து நோக்கங்களும் எவை?

    1. தனியார் நோக்கம் 2. சமூக நோக்கம் 3. அரச நோக்கம்
    4. பொருளாதார நோக்கம் 5. தொழில்சார் நோக்கம்

12. இதிகாசத்தில் கூறப்பட்ட அரண்மனைக்கல்வி முறையில் அடங்குபவை?

    அரசியல், அரச நிர்வாகம், நீதிபரிபாலனம், வில்வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம், மல்யுத்தம், வான்பயிற்சி, தர்க்கம், இலக்கியம், இலக்கணம், வானியல், சோதிடம் கலைகள்

**இலங்கையில் இந்துக்கல்விப் பாரம்பரியம்**

- புராதன இலங்கையில் இந்துக் கல்வி அரண்மனை சார்ந்த வைதீக கல்வியாக இருந்தது. அரசர்கள் பிராமணர்களிடம் கல்வி கற்றமை. உ + ம்: பண்டுல என்ற பிராமணர் அரச குமாரர்களுக்கு கற்பித்தமை.
- சோழர் காலத்தில் சதுர்வேதி மங்களம் என்ற பிராமணக் குடியிருப்புகளில் கல்விப் போதனை அரண்மனைகளில் வேதம், வேதகாமம், சோதிடம் அர்த்த சாஸ்திரம் கற்பிக்கப்பட்டதாக சூளவம்சம் கூறுகிறது.
- யாழ்ப்பாண இராச்சியத்தில் பிராமணர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டமை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் திண்ணைப்பள்ளிக் கூடங்களிலும் மடங்களிலும் கற்பிக்கப்பட்டது.
- 19ம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலரால் சைவப்பாடசாலைகள் அமைக்கப்பட்டன.
- 20ம் நூற்றாண்டில் சைவவித்தியா விருத்திச் சங்கம், இராமகிருஷ்ண மி'ன் என்பன உருவாக்கப்பட்டன. பின் அரசப் பாடசாலைகளில் இந்துக் கல்வி போதிக்கப்பட்டது. அரச அங்கீகாரத்துடன் அறநெறிப்பாடசாலைகள் இந்துக்கல்வியை போதிக்கின்றன.

## இந்து அறிவியல்

1. அறிவியல் என்றால் என்ன?

    முழுமையான ஒன்றை பகுத்து ஆராய்வதும்,முழுமையற்று காணப்படும் ஒன்றின் படிமுறையான தொடர்பையும் ஒழுக்கத்தையும் ஆராய்தலும் அறிவியலாகும்.

2. அதர்வன வேதத்தில் மருத்துவ சிந்தனைகள் பற்றிக் கூறும் பகுதிகள் எவை?

    பேவுஜானி சூக்தம்,ஆயள்யானி சூக்தம்

3. இந்திய மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

தன்வந்தரி

4. ஆயுர் வேதத்தை அஷடாங்கம் எனப்படும் எட்டுப் பிரிவுகளை வகுத்தவர் யார்?

தன்வந்தரி

5. சரகசம்மரிதை எனும் மருத்துவ நூலின் ஆசிரியர் யார்?

சரகர்

6. இந்திய அறுவைச்சிகிச்சையின் தந்தை எனப் போற்றப்படுவர் யார்?

சுஸ்ருதர்

7. சுஸ்ருத சம்சரிதையின் ஆசிரியர் யார்?

சுஸ்ருதர்

8. சஞ்சீவி மலையின் மூலிகைகள் பற்றிக் கூறும் நூல் எது?

இராமாயணம்

9. இந்திய சோதிடவியல்,வானவியல்,வரலாறு மிகவும் பரந்தது எனக் கூறியவர் யார்?

மராட்டிய ஆசிரியரான S.P.தீட்சித் என்பவராவார்

10. பஞ்ச சித்தாந்திகை எனும் தொகுப்பின் நூலாசிரியர் யார்?

வராகி மிகிரர்

11.பிரதான வாளியல் அறிஞர்கள் யாவர்?

ஆரியப்பட்டர், பிரம்மபுத்தர்

12. நட்சத்திரங்களைப் பற்றி சாத்திரத்தில் சிறந்த புலமைப் பெற்றவர் எனக் கருதப்படுபவர் யார்?

மகரிஷியாகிய கார்க

13. பிருஹத் சம்ஹிதை எனும் ஜோதிட நூலின் ஆசிரியர் யார்?

வராக மிகரர்

14. ஜோதிடனை ஆதரிக்காத இளவரசன் அழிவை சந்திப்பான் எனக் கூறியவர் யார்?

பகவான் கார்க

15. சாதக பாஸ்கர எனும் நூலை எழுதியவர் யார்?

பாஸ்கர இராச்சியார்

16. சோதிடங்களின் கணிப்பின்படி தனது ஜென்ம நட்சத்திரத்தில் பிறந்தநாள் கொண்டாடிய மன்னன் யார்?

முதலாவது இராஜராஜ சோழன்

17. ஈழத்தில் 3ம் பராக்கிரமபாகு அரசவையில் அரங்கேற்றப்பட்ட சோதிட நூல் எது?

சரஜோதி மாலை

18. சந்தான விருத்திக்கான ஜோதி விடயங்களை மட்டும் கூறும் நூல் எது?

சந்தானத் தீபிகை

19. வானசேகர சோடச பாவன சோதிடம் எனும் இலகு சாதகம் எனும் நூலின் ஆசிரியர் யார்?

அம்பலவாணப்பிள்ளை இடைக்காடர்

20. 20ம் நூற்றரண்டின் சந்தானமணி எனும் ஜோதிட நூலை இயற்றியவர் யார்?

சுபாபதி ஜோதிடர்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

21. பஞ்சாங்க உறுப்புகள் எவை?

வாரம்,திதி,நட்சத்திரம்,யோகம்,கரணம்

22. முதல் பஞ்சாங்கம் எக்காலத்தில் யாரால் கணிக்கப்பட்டது?

குப்தர் காலத்தில் அறியப்பட்ட நூல் கணிக்கப்பட்டது

23. சந்திர மாதம் என்றால் என்ன?

30 திதிகள் ஒரு சந்திர மாதம் ஆகும். 29 ½ சூரிய நாட்களாகும்

24. இந்திய ஆண்டின் ஆறு பருவங்கள் எவை?

வசந்தம், கிரீட்மம், வருஷ, சரத், ஹேமந்தம், சிசிரம் என்பனவாகும்

25. அபயணங்களின் இரு வகைகளும் எவை?

உத்தராயணம் - தை முதல் ஆனி வரை

தட்சிணாயணம் - ஆடி முதல் மார்கழி வரை

26. அமாவாசையுடன் தொடங்கும் பட்சம் யாது?

சுக்கிலப் பட்சம்

27. பௌர்ணமியுடன் தொடங்கும் பட்சம் யாது?

கிருஷண பட்சம்

28. சரசோதிமாலை என்ற சோதிட நூலின் ஆசிரியர் யார்?

புலவர் போசராச பண்டிதர் அல்லது தேனுவரைப் பெருமாள்

## இந்து அறிவியல்

அறிவைக் கொண்டு ஒன்றை ஆராய்ந்து அதன் உண்மைத் தன்மைகளைப் பகுப்பாய்வு செய்து பரிசோதனை மூலம் நிறுவுவதே அறிவியலாகும். இந்து அறிவியல் வானியல், சோதிடம், மருத்துவம், கணிதம் என்பன அடங்குகின்றன. இந்து அறிவியல் துறையின் சிறப்பு பற்றி ஆராய்தல்.

### வானியல்

பண்டைய இந்தியர்கள் வானியலில் மிகுந்த அறிவைப் பெற்றிருந்தனர். இந்திய வானியல் மிகவும் பரந்தது என மராட்டிய ஆசிரியரான ஞ. ட. தீட்சித் குறிப்பிட்டுள்ளார். வானியல் சிந்தனைகளை அவர் பின்வரும் கட்டங்களாக ஆராய்ந்துள்ளார்.

I. **வேதகாலம்:**

மண், விண், இடைவெளிபற்றி ஆராயப்பட்டுள்ளது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், சூரிய வருடம் சந்திரமாதம் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

II. **வேதாங்கம்:**

வேதாங்களில் சோதிடம் யுகங்கள், மாதங்கள், ருதுக்கள் பற்றிய குறிப்புகள்

III. **பண்டைய வானியல் கோட்பாடுகள்:**

(அ) பிதாமஹ கோட்பாடு - 365 நாட்கள் 1 வருடம்

(ஆ) புளிஷ கோட்பாடு - நீள்வட்டபாதை பற்றிய விளக்கம், நாட்கணிப்பு நட்சத்திரங்கள்

(இ) சூரியக் கோட்பாடு - கிரகங்களின் அசைவு

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

IV. வராக மிகிரர் முதல் கணேஷ தைவஞ்ஞன் வரை இந்திய வானியலாளர்கள் தொலை நோக்கு இன்றி தம் அவதானிப்புகளை செய்து முடிவுகளை வெளியிட்டனர். இவர்கள் கோள்கள் பற்றி ஆய்வு செய்து எல்லாக் கிரகங்களும் ஒவ்வோர் ஊழிக்காலத்திலும் ஒரே நிலையில் நின்று சுழலத்தொடங்கி அவ்வூழிக்கால் முடிவில் அந்நிலைக்கே மீளும் எனக் கூறினார். கோள்களுக்கு சமமான உண்மையான இலக்கணமுண்டு எனக் கூறினார். கி. பி. 8ம் நூற்றாண்டில் ஆரியப்பட்டர் எனும் வானியலாளர் புவியானது சூரியனைச் சுற்றி வருகிறதெனவும் அது தன் அச்சில் சுழல்கின்றது எனவும் கருத்து வெளியிட்டனர். ஆரியப்பட்டர் புளி'ர், வாசிஷடர், லாடதேவர் ஆகியோர் உலகம் உருண்டையாக இருப்பதனால் ஓரிடத்தில் இரவும் ஓரிடத்தில் பகலும் நிலவுவதாக கூறினர். அத்துடன் இந்து வானியலாளர்கள் சூரியனது பரிமாணம், சந்திரனது பரிமாணம், அவற்றின் தூரம் கிரகணங்கள் பற்றியும் வானியல் கருவிகளை நீர்கடிகாரம், சங்கு, சக்கரம், அரைவட்டம், வில் போன்றன பற்றியும் கூறியுள்ளனர்.

1. இந்தியாவின் பிரதான வானியலாளர்கள்

   ஆரியப்பட்டர் , புளிசர் , வராகமிகிரர் , பிரம்மகுப்தர் , வசிட்டர் , லாடதேவர்

- ஆரியப்பட்டரது சித்தாந்தத்தின் 4 வகைகள்

  1. கீதிகா 2. கணிதம் 3. காலக்கியா பாடம் 4. கோளம்

- இந்திய வானியலின் பிதாமகர்கள்

  1ஆம் ஆரியப்பட்டர், வராகமிஹிரர், பிரம்மகுப்தர்

- வானியல் சித்தாந்தம்

  பௌலீசர், ரோமகர், வாசிஷ்டர், சௌரர், பைதாமகர்

## சோதிடம்

சோதிடம் என்பது சமய அனுட்டானங்களையும், வாழ்க்கைக் கடமைகளையும் செய்வதற்கான காலங்களை கணித்துக் கூறுதலாகும். வானியலும் சோதிடமும் ஒன்றுடன் ஒன்று இணைந்த செயற்பாடுகளாகும். வேதகாலத்தில் இயற்கை நிகழ்வுகளைப் பற்றிய நம்பிக்கைகளே சோதிட சிந்தனைகளாக விருத்தியடைந்தன.

சோதிடம் என்பது ஜ்யோதி'ம் என வடமொழியில் கூறப்படும். ஒளியுடைய சாத்திரம் என்பதே இதன் பொருளாகும். வானியல் தொடர்பான அறிவியல் சிந்தனைக் கூறுகளான சூரியன், சந்திரன், நாள், ஆறுகாலங்கள், 27 நட்சத்திரங்கள், யுகங்கள் யாவும் சோதிடக் கலைக்கு உறுதுணையாக அமைந்தன. மக்கள் கோள்கள், நட்சத்திரங்களின் அசைவுகள் என்பவற்றை அறிந்து அவற்றின் இயக்கங்கள் பூமியோடு எவ்வளவு தொடர்புபடுகின்றன என்பவற்றையும் அந்த தொடர்புகளால் மானிட வாழ்வில் ஏற்படும் தாக்கங்களையும் அறிந்து அதன்படி செயற்பட முயன்றனர். அதன் விளைவே சோதிடமாகும்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

இதிகாச காலங்களில் இருந்து இன்றை வரை சோதிடம் மக்கள் வாழ்க்கையுடன் இவர்களது அன்றாட செயற்பாடுகளுடன் சோதிடம் பின்னிப் பிணைந்துள்ளது. பண்டைய வானியல் கோட்பாடுகளான பிதாமஹ கோட்பாடு, புளிவு கோட்பாடு, சூரியக் கோட்பாடு என்பனவும் சோதிடக்கலை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. பிருது மன்னனின் சோதிடரான மகரிஷி கார்க காலம், நட்சத்திங்கள் பற்றிய புலமை பெற்றிருந்தார். இவரது காலம், காலஞானம் பற்றிய நூலை அடிப்படையாகக் கொண்டு வராமிகிரர் பிருஹத் சம்ஹிதை எனும் சோதிட நூலை எழுதினார். இந்நூலில் சோதிடம் பற்றி பரந்த விரிவான விளக்கங்கள் உள்ளன. கிரகபலன் துரதிஷ்டம், ராசி வீடுகள், கிரகபலனால் மாறுபடும் வாழ்க்கை முறைகள் தோ'ங்களுக்கான மார்க்கங்கள் என்பன கூறப்பட்டுள்ளன. இது தவிர பிருகத் ஜாதக, யோக யாத்திரா போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

## மருத்துவம்

இந்து அறிவியலில் மருத்துவம் சிறப்பிடம் பெறுகிறது. இன்றைய நவீன விஞ்ஞானம் கூறும் எத்தனையோ மருத்துவ முறைகளை இந்துக்கள் முன் கூட்டியே கூறிவிட்டனர். நோயை அறிதலும் நோய் காரணத்தை அறிதலும் நோயை தணித்தலும் மருத்துவம். இதனை வள்ளுவர்

“நோய் நாடி முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயலது” எனக் கூறியுள்ளார்.

இந்துக்களின் மருத்துவம் வேதகாலத்திலேயே ஆரம்பிக்கின்றது.இருக்கு வேதத்தின் ஓஷத சூக்தம் வாதம், பித்தம், கபம் மூன்றையும் திரிதாது என்கிறது. கண் காது சார்ந்த குறைபாடுகளை தீர்ப்பவர்களாக அஷ்வினி குமாரர்கள் போற்றப்பட்டனர். யசுர் வேதத்தில் குஷடம் இருதயநோய், காசநோய் பற்றி கூறப்பட்டுள்ளது.

இந்து மத மருத்துவ வரலாற்றில் அதர்வ வேதம் பிரதானமானது. அதர்வ வேதத்தில் பேஷஜானி சூக்தம், ஆயுஷமானி சூக்தம் என்பவற்றில் மருத்துவ சிந்தனைகள் அதிகமாக உள்ளது. சூரியனின் சிவப்புக் கதிர்களுக்கு மஞ்சட் காமாலையை கட்டுப்படுத்தும் சக்தி உள்ளதாக அதர்வ வேதம் கூறுகிறது. அத்துடன் மனித உடல் கூற்றில் குருதிச் சுற்றோட்டம் பற்றிய விடயங்களும் கூறப்பட்டுள்ளன. இன்றைய மூலிகை மருத்துவத்தின் முன்னோடியாக அதர்வ வேதம் அமைந்தது.

இந்திய மருத்துவத் துறையின் ஆரம்ப கர்த்தாக்களாக ஆத்திரேயர், தன்வந்திரி, சரகர், சுஸ்ருதர் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். ஆத்திரேயர் ஆயுர்வேத நூலொன்றை எழுதியுள்ளார். தன்வந்திரி இந்திய மருத்துவத்தின தந்தை எனப்படுகிறார். ஆயுர்வேதத்தை அஷடாங்கமாக வகுத்துள்ளார். சரகர் தனது சரக சம்ஹிதை எனும் நூலில் இரத்த ஓட்டம் அதன் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கியுள்ளார். இரத்த குழாய் பற்றிய விடயங்களையும் கூறியுள்ளார். சுஸ்ருதர் அறுவை சிகிச்சையின் தந்தை என போற்றப்படுகின்றார். இவர் இயற்றிய சுஸ்ருத சம்ஹிதையில் அறுவை சிகிச்சை பற்றி விஞ்ஞான ரீதியில் கூறப்பட்டுள்ளது. மேலும் இவரது நூலில் காது, மூக்கு தொண்டை, கண்நோய், விஷமுறிவு, மனநலம் என்பன பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இதிகாசங்களின் மருத்துவ சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. வால்மிகி இராமாயணத்தில் சஞ்சீவி மலையில் காணப்பட்ட மூலிகைகள் அது குணப்படுத்தும் நோய்கள் கூறப்பட்டுள்ளன. தமிழக வரலாற்றில் சங்ககாலம் தொட்டு பின்வந்த சகல ஆட்சிக் காலங்களிலும் மருத்துவத்துறை சிறப்பிடம் பெற்றமையை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

1. இந்து வழிபாட்டில் மருத்துவ சிந்தனைகள்

இந்து வழிபாட்டு முறைகளில் பல்வேறு மருத்துவ சிந்தனைகள் காணப்படுகின்றன.நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் தோப்புக்கரணம் போடுதல், அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள், தலயாத்திரை, கிரிவலம் வருதல், என்பன இங்கு குறிப்பிடத்தக்கன. நெற்றியில் குட்டுவதால் நரம்பு மண்டலங்கள் தூண்டப்படுகின்றன. ஏனைய வழிபாட்டு முறைகளால் உடலிலுள்ள நாரி, நரம்புகள், தசைகள் வலுவூட்டப்படுகின்றன. இரத்த ஓட்டம் சீராகிறது. இந்து மக்களின் முக்கிய விடயமான யோகாசனம் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆங்கில மருத்துவத்தால் தீர்க்க முடியாத பல நோய்கள் பிராணாயாமம், சூரிய நமஸ்காரம் என்பன தீர்த்து வைக்கின்றன. அவ்வாறே சிவசின்னங்கள் அணிவதாலும் பல நோய்கள் தீர்க்கப்படுகின்றன.

2. இந்து கணிதவியல்

இந்துக்கள் வணிகத்துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். இந்துக்கணிதவியலின் தந்தை என ஆரியப்பட்டர் போற்றப்படுகின்றார்.இவர் ஆரியப் பட்டீயம் எனும் நூலை எழுதியுள்ளார். எண்கணிதம் அட்ஷர கணிதம், திரிகோண கணிதம் என்பவற்றின் பயன்பாட்டை இந்துக்களின் வாழ்வியலில் காணலாம். பௌதாயன் சூத்திரத்தில் யாக வேதகளை, வட்டம், சதுரம், அரைவட்டம், முக்கோணம் ஆகிய வடிவங்களில் அமைத்தல் பற்றி கூறுகிறது. ஆரியப்பட்டரின் ஆரியபட்டீயம் வராக மிகிரரின் பஞ்சசித்தாந்திகா, பிரமஸ்மத சித்தாந்தம் பாஸ்கரரின் கர்ம நிர்பந்தம் போன்ற நூல்கள் இந்துக்களின் கணிதவியல் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன.

## பின்னிணைப்பு

1) வைதீக ஒழுகலாறுகளைப் போதும் தன்மையிலும், தெய்வீக வரலாற்றைப் பரப்பும் நோக்கிலும் உருப்பெற்ற நூல் எது?
   மகாபுரணங்கள்

2) தமிழக வரலாற்றில் இயற்கை நெறிக்காலம் எனச் சிறப்பித்து அழைக்கப்பட்ட காலம் எது?
   சங்க காலம்

3) சங்க காலத்தில் ஆரிய திராவிட இணைப்பினைக் காட்டி நிற்கும் வழிபாடு எது?
   முருக வழிபாடு

4) சங்க காலத்தில் ''மாயோன்'', ''சேயோன்'', ''பழையோன்'' என்ற பெயர்களில் வழிபாடு செய்யப்பட்ட தெய்வங்கள் எவை?
   மாயோன் - திருமால்

   சேயோன் - முருகன்

   பழையோன் - கொற்றவை

5) தமிழக வரலாற்றில் அறநெறிக்காலம் எனப் போற்றப்படும் காலம் எது?
   சங்கமருவிய காலம்

6) சங்கமருவிய காலத்தில் அறநூல்களாகக் கருதப்படும் நூல்கள் எவை?
   திருக்குறள், நாலடியார், திரிகடுகம்,சிறுபஞ்ச மூலம், ஏலாதி, ஆசாரக்கோவை

7) நூலாசிரியராகவும், கட்டடக்கலை சிற்பியாகவும், இசை, ஓவிய வல்லராகவும் விளங்கிய மன்னன் யார்?
   முதலாம் மகேந்திரவர்மன்

8) வாதாபிர் சாளுக்கியருடன் போராடி தமிழகத்தை மீட்ட பெருமைக்குரிய பல்லவ மன்னன் யார்?
   முதலாம் நரசிம்ம பல்லவ எனும் மாமல்லன்

9) ''வித்யாவிநீதன்'' எனும் விருதுப் பெயருக்குரிய பல்லவ மன்னன் யார்?
   பரமேஸ்வரன்

10) காஞ்சிக்கடிகையை மறுசீரமைப்பபுச் செய்து வடமொழிப்பண்பாட்டைத் தமிழகத்தில் பரவச் செய்த பல்லவ மன்னன் யார்?
    இராஜசிம்மன்

11) இராஜசிம்மனால் சிவாலயங்களுக்கு சொந்தமாக வழங்கப்பட்ட நிலபுலன்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டன?
    தேவதானம்

12) இராஜசிம்மனால் வைணவ ஆலயங்களுக்குச் சொந்தமாக வழங்கப்பட்ட நிலபுலன்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டன?
    திருவிடையாட்டம்

13) ''சிவசூடாமணி'', ''சங்கரபக்தன்'', ''ஸ்ரீஆகமப்பிரியன்'', ''சைவசித்தாந்த மார்க்கன்'' என்ற விருதுப்பெயர்களுக்குரிய மன்னன் யார்?
    இராஜசிம்மவர்மன்

14) சைவ சமய நூலான ''காளத்தி மகாத்மியம்'' எனும் நூல் எழுதப்பட்ட காலம் எது?
    விஜயநகர பேரரசின் கிருஸ்ண தேவராயரின் ஆட்சிக்காலத்தில்

15) ‘‘விஷ்ணு சித்தியம்’’ எனும் நூலின் ஆசிரியர்?

கிருஸ்ணதேவராயர்

16) விருட்பாட்சகர் கோயில், விட்டலாசுவாமி கோயில்களை அமைத்த மன்னன் யார்? அக்கோயில்கள் எக்காலத்திற்கு உரியனவை?

கிருஸ்ணதேவராய மன்னரால் கட்டப்பட்டது.

விஜயநகர நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்டது.

17) கருடத்துவஜக் கொடி எக்கடவுளுக்குரியது?

விஷ்ணு

18) ‘‘பஞ்சஸமஸ்கார’’ வழிபாடுகள் எவை? இது எக்கடவுளுக்குரிய வழிபாடாகும்?

முத்திரை தரித்தல், திருமணக்காப்பு, தாஸ்ய நாமம் சூடுதல், திருமந்திர உபதேசம், திருவாதாரனம் விஷ்ணு கடவுளுக்குரிய வழிபாடாகும்

19) ‘‘சிற்பக்கலைக் களஞ்சியம்’’ எனப்போற்றப்படும் பஞ்சப்பாண்டவரதக் கோயில் எது?

தர்ம ராஜ ரதம்

20) ‘‘ஜலசயனம்’’ என சிறப்பித்து அழைக்கப்படும் ஆலயம் எது?

மாமல்லப்புரத்தில் உள்ள கடற்கரைக் கோயில் (முகுந்தன் கோயில், ஈஸ்வரன் கோயில்’’

21) பிற்கால சோழர் கலைப்பாணிக் கோயில்கள் எவை?

ஐராவதேஸ்ரம் அல்லது இராஜ ராஜேஸ்வரம், சிதம்பரம், திரிபுவனேஸ்வரம்

22) ‘‘சிற்பங்களால் இழைக்கப்பட்ட சோழ வளாகம் என வர்ணிக்கப்படும் ஆலயம் எது?

ஐராவதேசரம் அல்லது இராஜ ராஜேஸ்வரம்

23) இடத்திற்கிடம் நகர்தக்கூடியவனாய் இருப்பினும் அவ்வாறு நகர்த்தக் கூடாது என்ற நோக்கில் நிறுவப்படுகின்ற சிற்ப வடிவத்தின் பெயர் யாது?

சாலச வடிவம்

24) ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற ‘‘ பண்டு நால்வருக் கர முறைத்தருளி’’ எனும் தேவாரப்பதிகத்தில் போற்றப்பட்ட தெய்வம் யார்?

தட்சணாமூர்த்தி

25) நடராஜ வடிவம் உணர்த்தும் தத்துவம் யாது?

- சிருஸ்டி – படைத்தல் - உடுக்கை ஏந்திய வடிவம்
- ஸ்திதி – காத்தல் - அபயகரம்
- சங்காரம் - அழித்தல் - தீ ஏந்திய கரம்
- திரோபவம் - மறைத்தல் - ஊன்றிய திருவடி
- அதுக்கிரகம் - அருளல் - தூக்கிய திருவடி

26) ‘‘சிவ நடனம்’’ எனும் நூலின் ஆசிரியர் யார்?

கலாயோகி ஆனந்த குமாரசுவாமி

27) சகுன பிரமத்தினை உயர்நிலை பிரம்மமாக முதன்மைப்படுத்தும் வேததாந்தியர் யார்?

மத்துவர்

28) வீடுபேறு அடைய தகுதியற்றவர்கள் என மத்துவர் காட்டும் ஆன்மாக்கள் யாவர்?

சம்சார பந்தத்தில் உழல்வோர், நித்திய நரகத்தில் உழல்வோர்

29) ஆகமப்பிராமணம் எனக்கூறப்படுபவை யாவை?
உரை அளவை

30) சிவஞானபோதத்தின் வழிநூல் எது? சார்பு நூல் எது?
வழிநூல் - சிவஞானசித்தியார்
சார்பு நூல் - சிவப்பிரகாசம்

31) பன்னிரெண்டு சூத்திரங்களோடும், உதாரண வெண்பாக்களையும், வார்த்திகம் எனும் உரையையும் கொண்டமைந்த சித்தாந்த நூல் எது?
சிவஞானபோதம்

32) அருணந்திச்சிவாசாரியார் இயற்றிய சித்தாந்த நூல்கள் எவை?
சிவஞானசித்தியார், இருபா இருப∴து

33) சித்தாந்த அட்டக நூல்கள் எவை?
சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்ப∴றொடை, கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்

34) அகச்சமய கொள்கைகளை மறுதலித்து சைவ சித்தாந்த கொள்கைகளை முதன்மைப்படுத்த உமாபதிச்சிவாசாரியார் பாடிய நூல் எது?

சங்கற்ப நிராகரணம்

35) ஆகமங்களை சிறப்பு நூலாக ஏற்றுக்கொண்ட சமயங்கள் எவை?
சைவம், சாக்தம், வைணவம்

36) சைவ, சாக்த, வைணவ ஆகமங்களை எவ்வாறு அழைப்பர்?
- சைவ ஆகமம் - சிவாகமங்கள்
- சாக்த ஆகமம் - தந்திரங்கள்
- வைணவ ஆகமம் - சங்கிதைகள், வைகாசனம்

37) ஆலயம் ஒன்றில் அமையவேண்டிய பிராகாரங்கள் பற்றி கூறும் ஆகமம் எது?
காமிக ஆகமத்தின் பிராகர இலட்சண விதிப்படலம் எனும் தலைப்பு

38) திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கல்லைத் தெரிவுப் பற்றி சிவாகமங்கள் எத்தலைப்பில் கூறுகின்றது?
சீலாபரீட்சணம்

39) கோயில் கிரியைகள் பற்றி சிவாகமங்கள் வகைப்படுத்திய பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கான விளக்கங்களை தருக.
கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம்
- கர்ஷணம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை தெரிவு செய்தல்
- பிரதிட்டை – ஆலயங்களின் திருவுருவங்களை பிரதிட்டை செய்தல்
- உற்சவம் - ஆலயத்தில் வருடம் ஒருமுறை இடம்பெறும் திருவிழா
- பிராயச்சித்தம் - ஆலயங்களிக் கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

40) சைவ சித்தாந்தம் காட்டி நிற்கும் கொடி மரத்தத்துவம் யாது?

- கொடிமரம் - பதி
- கொடிச்சீலை – பசு
- மஞ்சட்கயிறு – திருவருட் சக்தி
- தருப்பைக் கயிறு – பாசம் (முப்பொருள் தத்துவத்தை காட்டி நிற்கும்)

## வேதங்கள்

1. வேத காலத்தினைக் குறிப்பிடுக?

   கி.மு 1500 – கி.மு 600

2. வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?

   அறிவு

3. திரையீ வித்யா என சொல்லப்படும் வேதங்கள் எவை?

   இருக்கு, யசுர், சாமம்

4. வேதங்களின் வேறு பெயர்கள் 5 தருக?

   1. எழுதாமறை } ஏட்டில் எழுதப்படாதவை
   2. எழுதாக்கிளவி } ஏட்டில் எழுதப்படாதவை
   3. சுருதி – செவி வழியாகப் பேணப்படுபவை
   4. அபௌருஷேயம் - மனிதனால் ஆக்கப்படாதவை
   5. ஆம்நாயம் - இறைவனால் அருளப்பட்டது

5. இருக்கு என்பதன் பொருள் யாது?

   பாட்டு

6. இருக்கு வேதத்தில் 2ஆம் மண்டலம் - 7ஆம் மண்டல பாடல்களை இயற்றியோர் யாவர்?

   விசுவாமித்திரர், வாமதேவர், அத்திரி, பரத்துவாசர், வசிட்டர்

7. செய்யுள் நடையிலும் உரை நடையிலும் அமைந்த மந்திரங்களை கொண்ட வேதம் எது?

   யசூர் வேதம்

8. இருக்கு வேதம் எத்தனை மண்டலங்களைக் கொண்டுள்ளது?

   10 மண்டலங்கள்

9. இருக்கு வேதம் எத்தனை சூக்தங்களைக் கொண்டுள்ளது?

   1028 சூக்தங்கள்

10. யசூர் வேதம் எத்தனை சாகைகளைச் கொண்டுள்ளது?

    101

11. அதர்வ வேதம் கொண்டுள்ள காண்டங்களின் தொகை யாது?

    20 காண்டங்கள்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

12. அதர்வ வேதம் கொண்டுள்ள சூக்தங்களையும், பாடல்களின் தொகையையும் தருக.

731 சூக்தம், 6000 பாடல்

13. அதர்வ வேதத்தின் வேறு பெயர்கள் எவை?

அதர்வாங்கிரஸ், பிருகுவாங்கிரஸ், பிரம வேதம்

14. வேதங்களின் நான்கு பகுதிகளும் எவை?

சங்கிதை, பிராமணம், ஆரணியம், உபநிடதம்

15. சாம வேதம் எத்தனை பாடல்களைக் கொண்டுள்ளது?

1875

16. சாம வேதம் கொண்டுள்ள பிரிவுகள் யாவை?

ஆர்ச்சிகம் (பாட்டுக்களின் முதல் தொகுதி)

2 – உத்தர ஆர்ச்சிகம் (பாட்டுக்களின் பின் தொகுதி)

17. வேதங்களின் நான்கு பகுதிகளையும் விளக்குக.

சங்கிதை – மந்திரங்களின் தொகுப்பு

பிரமாணங்கள் - வேள்வி, கிரியைகளுக்குரிய விதிகளை கூறுபவை

ஆரணியம் - வானப்பிரஸ்தாதுக்குரிய சமம் அனுட்டானங்களை எடுத்துரைப்பவை

ஊபநிடதம் - உண்மைப் பொருள் பற்றிய விசாரணை

18. வேதத்தில் கருமகாண்ட பகுதி எது?

சங்கிதை, பிராமணம்

19. ஆரணியம் எந்த காண்டம்?

உபாசனை காண்டம்

20. ஞான காண்ட பகுதி எது?

உபநிடதம்

21. சவித்திரு எனும் ஞாயிற்றுர் கடவுளுக்குரிய மந்திரம் எது?

காயத்திரி மந்திரம்

22. சதருத்திரியம் எனும் பகுதியில் உருத்திரனுக்கு பல நாமம் கூறி வழிப்படும் முறை எந்த வேதத்தில் உள்ளது?

சுக்கில யசூர் வேதத்தில்

23. சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வேதம் எது?

அதர்வண வேதம்

24. உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வ செழிப்பை கொடுக்கும் மந்திரம் எது?

பௌஷ்டிகானி

25. நீண்ட ஆயுளை அளிக்கவல்ல மந்திரம் எது?

பேஷகானி

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

26. நால்வகை வருணப் பற்றி கூறும் வேதம் எது?

இருக்கு வேதம் - புருஷ சூக்தம்

27. இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பம் எவ்வேதத்தில் எந்த சூக்தத்தில் காணப்படுகின்றது?

இருக்கு வேதம் - நாயதீய சூக்தம்

28. ரிதத்துக்குரிய பொறுப்புடையவன் என்பதால் வருணன் கொண்டுள்ள சூக்தங்கள் எவை?

ரிதஸ்வான், ரிதஸ்ய கோபா

29. பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான விடயங்களை கொண்டுள்ள சூக்தங்கள் எவை?

நாஸதீய சூக்தம், (ஜம) யம சூக்தம், வருண சூக்தம்

30. ஆன்மாவின் இறப்பிற்குப் பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள் அதன் பயன் பற்றி கூறும் சூக்தம் எது?

இருக்கு வேதம் - யம சூக்தம்

## ஆகமம்

1. ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?

தொன்று தொட்டு வரும் அறிவு

ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் அல்

2. சைவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

சிவாகமங்கள்

3. வைணவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

சங்கிதைகள்

4. சாக்த ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

தந்திரங்கள்

5. ‘‘வேதமோடாகமம் மெய்யாம் இறைநூல்’’ எனக் குறிப்பிடப்பட்ட நூல் எது?

திருமந்திரம்

6. ஆகமங்களின் கிரியை நெறியை விளக்கி கூறும் நூல் எது?

பத்ததிகள்

7. ‘‘மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம்’’ எனப் பாடியவர் யார்?

மாணிக்கவாசகர்

8. சைவ ஆகமங்களின் பொருளை விளக்குக?

ஆ - பசு, க - பதி, ம - பாசம் அதாவது பதி, பசு, பாசம் எனும் முப்பொருளை உணர்த்தும் நூல்

ஆ - சிவஞானம், க - மோட்சம், ம - மலநாசம் அதாவது மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உயிர்ப்பித்து மோட்சத்தை நல்குவது.

9. சிவாகமங்கள் எத்தனை?

28



மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

10. சிவாகமங்கள் ஒவ்வொன்றும் கொண்டுள்ள நான்கு பிரிவுகளும் எவை?
சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம்
11. சரியா பாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
பிராயசித்தவிதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு, உமா மகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம்
12. கிரியா பாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
மந்திரம், உற்சவம், நித்திய நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்கள் அணியும் முறை
13. அட்டாங்க யோகம், அட்டமா சித்திகள், அறுவகை ஆதாரங்களை கூறும் பாதம் எது?
யோக பாதம்
14. முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம் பற்றி கூறும் பாதம் எது?
ஞான பாதம்
15. ஞானபாதம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
ஆகமாந்தம்
16. ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி கூறும் ஆகமம் எது?
காமிக ஆகமம் - பிரகார லட்சண விதிப்படலம்
17. திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லை தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் கூறும் பகுதி எது?
சிவாபரீட்சணம்
18. "திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல" என்று கூறும் நூல் எது?
சுக்கிர நீதி
19. "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமே" என பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்
20. கர்'ணம் என்றால் என்ன?
ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை பண்படுத்துதல்
21. ஆலய கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை எவ்வாறு அழைக்கப்படும்?
பிராயசித்தம்
22. சிவாகமங்களின் சைவ சித்தாந்த கருத்து கூடுதலாக உள்ள பாதம் எது?
யோக பாதம், ஞான பாதம்
23. சித்தாந்த கருத்துக்கள் அதிகமாக உள்ள ஆகமங்கள் எவை?
கிரணம், ரௌரவம், பௌஷகரம்
24. அட்டாங்க யோகங்கள் எவை?

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி

25. அட்டமா சித்திகள் எவை?

அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம்

26. சாக்த ஆகமங்கள் எத்தனை?

77

27. வைணவ ஆகமங்கள் எத்தனை?

108

28. வைணவ ஆகமங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?

தந்திரம், சங்கிதை, பாகவத சாத்திரம்

29. வைகாசன மரபை தொகுத்தவர் யார்?

வைதிக ரிஷி விகாணஸ்

30. சிவாகமங்கள் 28 எவை?

| | | | |
|---|---|---|---|
| 1. காமிகம் | 2. யோகசம் | 3. சிந்தியம் | 4. காரணம் |
| 5. அசிதம் | 6. தீப்தம் | 7. சூக்குமம் | 8. சகச்சிரம் |
| 9. அஞ்சுமான் | 10. சுப்பிரபேதம் | 11. விஜயம் | 12. நிச்சுவாசம் |
| 13. சுவாயம்புவம் | 14. ஆக்கிநேயம் | 15. வீரம் | 16. ரௌரவம் |
| 17. மகுடம் | 18. விமலம் | 19. சந்திரஞானம் | 20. முகவிம்பம் |
| 21. புரோற்கீதம் | 22. லளிதம் | 23. சித்தம் | 24. சந்தானம் |
| 25. சருவோக்தம் | 26. பாரமேசுரம் | 27. கிரணம் | 28. வாதுளம் |

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்